# உணவுப் பணவீக்கம்; இலங்கைக்கு 04ஆவது இடம்

2021 செப்டெம்பர் முதல் 2022 ஓகஸ்ட்வரை, 53 நாடுகளில் உணவுப் பாதுகாப்பு குறித்த புதிய அறிக்கையை உலக வங்கி வெளியிட்டுள்ளது. அதன்படி, உலகில் உணவுப் பணவீக்கம் அதிகமுள்ள நாடுகளில்...

02 பக்கம்

Follow us:

# தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ் : 65 சுபகிருது வருடம், புரட்டாசி மாதம் 03ஆம் திகதி செவ்வாய்க்கிழமை (20.09.2022) ஹிஜ்ரி 1444, ஸஃபர் - 23 0115886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50

# குழந்தைகளுக்கு பால்மா திருடிய தம்பதியினர் கைது

பல்பொருள் விற்பனை நிலையத்துக்கு தமது இரு குழந்தைகளுடன் வந்த தம்பதியினர் நான்கு பால்மா ரின்களை திருடிய குற்றச்சாட்டில் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் பிலியந்தலையில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

02 பக்கம்




# பிரித்தானியா முழுவதும் சோகமயம்; மகாராணியின் பூதவுடல் லண்டனில் நேற்று நல்லடக்கம்

பிரித்தானியாவின் இரண்டாம் எலிசபெத் மகாராணியின் பூதவுடல் லண்டனில் நேற்று நல்லடக்கம் செய்யப்பட்டது. இலட்சக்கணக் கான பொதுமக்கள் இறுதி நாளான நேற் றும் அஞ்சலி செலுத்தியதுடன், உலகத்தலைவர் கள் பலர் உள்ளிட்ட இரண்டாயிரத்துக்கும் அதிக மான அரச குடும்பத்தினரும் மகாராணிக்கு தமது மரியாதையை செலுத்தினர்.

10 பக்கம்



# மருந்துகளுக்குத் தட்டுப்பாடு!



## நோயாளர்களுக்கு பெரும் இன்னல்

## விலை அதிகரிப்பினாலும் கடும் தாக்கம்

(யோ.தர்மராஜ்)

பொருளாதார நெருக்கடியால் நோயாளர்களுக்கு தேவையான அத்தியாவசிய மருந்துகளுக்கு வைத்தியசாலைகளில் பெரும் தட்டுப்பாடு நிலவுவதால் தீவிர நோயால் பாதிக்கப்பட்டுள்ள நோயாளர்கள் அசௌகரியங்களுக்கு முகங்கொடுப்பதாக வைத்தியர்கள் தெரிவிக்கின்றனர்.

02 பக்கம்

# இலங்கைக்கு உதவ முன்வருமாறு உலக நாடுகளிடம் ஐ.நா. கோரிக்கை

## அச்சுறுத்தல் நிலையென வதிவிடப் பிரதிநிதி ஹனா சுட்டிக்காட்டு

(யோ.தர்மராஜ்)

சுகாதாரம், கல்வி மற்றும் வறுமை ஒழிப்பு ஆகியவற்றில் இலங்கையின் வெற்றிகள், தற் போதைய நெருக்கடியால் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளதென ஐக்கிய நாடுகளின் வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கர் ஹம்டி, தனது ட்விட்டர் பதிவில் தெரிவித்துள்ளார்.

உணவுப் பாதுகாப்பை...

10 பக்கம்

# அறிக்கை கிடைத்த பின்னர் அடுத்தகட்ட நடவடிக்கை

## திருக்கோணேஸ்வரர் ஆலய நில அபகரிப்பு தொடர்பில் அமைச்சர் விதுர தெரிவிப்பு

(யோ.தர்மராஜ்)

திருக்கோணேஸ்வரர் ஆலய நில ஆக் கிரமிப்பு தொடர்பாக தான் அறிக்கை யொன்றை கோரியுள்ளதாகவும் அது இவ்வாரத் தில் கிடைத்தபின் அடுத்த கட்ட நடவடிக் கையை எடுப்பதற்கு எதிர்பார்ப்பதாகவும் புத்தசாசன, சமய...

02 பக்கம்

# கோட்டாவைப் போலொருவரை இனி தேடிப்பிடிக்க முடியாது!

## மக்கள் கவலைப்படுவார்களென்கிறார் மஹிந்தானந்த



(யோ.தர்மராஜ்)

கோட்டாபய ராஜபக்ஷவைப் பதவியிலிருந்து நீக்குவதற்கு தலைமைத் தாங்கியவர்கள் உட்பட நாட்டிலுள்ள ஒவ்வொருவரும் இறக்கும் இறுதி தருணத்தில் அல்லது கடைசி மூச்சு இருக்கும்...

02 பக்கம்

# உக்ரைனில் இலங்கையர்கள் மீது ரஷ்யப் படையினர் சித்திரவதை

## மீட்கப்பட்ட எழுவர் தகவல்

உக்ரைனின் கார்கிவ் ஒப்லாஸ்ட் பகுதியிலிருந்து ரஷ்யப் படைகள் பின்வாங்கியதைத் தொடர்ந்து, சிறையி லிருந்து தப்பிய ஏழு இலங்கைப் பிரஜைகளின் விபரங்களை உக்ரைன் வெளியிட்டுள்ளது.

கார்கிவ் மாகாணத்தில் உள்ள தேசிய பொலிஸ்...

02 பக்கம்



# ஐ.நா. பொதுச் சபை விவாதம்; நியூயோர்க்கில் இன்று ஆரம்பம்

## சிறுபான்மையினருக்குரிய உரிமைகள் தொடர்பில் நாளை விசேட அமர்வு



(நமது விசேட செய்தியாளர்)

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் உயர்மட்ட விவாதம் இன்று அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் ஆரம்பமாகவுள்ளது. எதிர் வரும் 26ஆம் திகதிவரை விவாதம் இடம்பெறவுள்ளதுடன், இலங்கை தொடர்பான அறிக்கையை சமர்ப்பித்து வெளி நாட்டலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி...

02 பக்கம்

# அதிகரித்த மின்கட்டணத்தை செலுத்தாதிருக்க தேரர்கள் தீர்மானம்

(யோ.தர்மராஜ்)

மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்கும்போது விகாரைகளுக்கு வழங்கப்படாத நிவாரணம் வர்த்தக...

02 பக்கம்

# நாடாளுமன்றத்தைப் பார்வையிட பொதுமக்களுக்கு அனுமதி

கொரோனா தொற்றுப்பரவல் மற்றும் பாதுகாப்பு காரணங்களுக்காக நாடாளு மன்றத்தைப் பார்வையிட பொதுமக்களுக்கு விதிக்கப்பட்டிருந்த தற்காலிகத் தடை இன்று முதல் நீக்கப்படவுள்ளது.

அதன் பிரகாரம் பார்வையாளர் கூடத்தை திறப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டுள்ளன.

மேலும், நாடாளுமன்ற அமர்வுகள் இல்லாத நாட்களில் காலை 9.30 மணிமுதல் பிற்பகல் 03 மணிவரை நாடாளுமன்றத்தை பொதுமக்கள் பார்வையிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தைப் பார்வையிட பாடசாலை மாணவர்கள் விரும்பினால் www.parliament.lk என்ற இணையத்தின் ஊடாக, வேண்டுகோள் கடிதம் அல்லது 0112777473/ 0112777335 ஆகிய இலக்கங்களுக்கு...

02 பக்கம்

## உஷ்



முன்னாள் பிரதமரை மீண்டும் பிரத மராக நியமிக்க திரை மறைவில் ஏற்பாடுகள் நடக்கின்றன.

இவ்வருட இறுதிக்குள் அந்த நடவடிக்கையை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கு இப்போதைய பிரதமர் தினேஷ் குணவர்தனவின் விருப்பமும் கோரப்பட்டுள்ளதாக தகவல்.

எவ்வாறாயினும் அந்த நியமனத்திற்கு முன்னர் கோட்டாபய மீண்டும் அரசியல் பிரவேச அறிவிப்பையேதும் செய்து விடக்கூடாதென விரும்புகிறது ராஜபக்ஷ குடும்பம்.



இலங்கை தமிழரசுக் கட்சியின் ஏற்பாட்டில் பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிராக கையெழுத்து திரட்டும் நடவடிக்கைகள் அநுராதபுரத் தில் நேற்று முன்னெடுக்கப்பட்டன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், ஆர்.சாணக்கியன் ஆகியோரும் இதன்போது கலந்துகொண்டிருந்தனர்.

# ஐ.நா. சபையில் பிரேரணை நிறைவேறினால் ஆபத்து!

## கம்மன்பில எம்.பி. எச்சரிக்கை

(யோ.தர்மராஜ்)


ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இம்முறை இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணை அதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டால், அந்த பிரேரணையிலுள்ள அனைத்து விடயங்களும் இலங்கைக்கு உதவிகளை வழங்குவதற்கான நிபந்தனைகளாக முன்வைப்பதற்கான வாய்ப்புள்ளதாக பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில எம்.பி. தெரிவித்தார்.

பிவித்துரு ஹெல உறுமயவின் தலைமையகத்தில்...

02 பக்கம்

## கமெண்ட் கந்தர்..

என்னதான் மருந்து தட்டுப்பாடு இருந்தாலும் நாட்டின் குடிமக் களுக்கான மருந்துக்கு எந்த தட்டுப்பாடும் இல்லை என்னங்கோ...



## அதிகரித்த...

நிலையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, அதிகரித்த மின் கட்டணத்தை செலுத்த முடியாது என்பதோடு, இதுவரை மாதமொன்றுக்கு செலுத்திய அதே தொகையே இனியும் செலுத்தப்படும் எனவும் ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் மெதகொட அபயதிஸ்ஸ தேரர் தெரிவித்துள்ளார்.

விகாரைகளுக்கு மாதம் 12 ஆயிரம் ரூபாவாக இருந்த மின்கட்டணம் தற்போது, 60 ஆயிரம் ரூபாவாக அதிகரித்துள்ளன. இந்த 60 ஆயிரம் ரூபாவை கவனத்தில் கொள்ளாது, இதுவரை ஒரு மாதத்திற்கு செலுத்தி வந்த , 12 ஆயிரம் ரூபாவையே மாதந்தோறும் செலுத்துவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

விகாரைகளுக்கு அதிகரித்துள்ள மின் கட்டணத்தை நிராகரித்துள்ள விகாராதிபதிகள், அந்த கட்டணத்தை செலுத்தாதிருப்பதற்கும் தீர்மானித்துள்ளனர். ஒருவேளை, மின்வெட்டு ஏற்பட்டால் அதற்கு மின்'வாரிய அதிகாரிகளே பொறுப்புக்கூற வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், விகாரைகளில் மின் அலகு 180 க்கு மேல் இருந்தால், விகாரைகளுக்கு ஒரு மின் அளவுக்கு 65 ரூபா வீதம் அறிவிடுவதோடு, வர்த்த நிலையங்களில் மின் அலகு 180 க்கு மேல் இருந்தால், ஒரு மின் அலகுக்கு 32 ரூபா கட்டணமே அறிவிடப்படுகின்றன. புதிய மின் கட்டண அதிகரிப்புகளின் கீழ் விகாரை பிரிவேனாவில் மாதாந்தம் 50 ஆயிரம் ரூபாவாக இருந்தால், மின் கட்டணம் சுமார் 3 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

## இலங்கைக்கு உதவ...

உறுதி செய்வதற்கும், மருத்துவப் பொருட்களில் நிலவும் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கும், இலங்கைக்கு, அதன் அனைத்து நட்பு நாடுகளும் உதவ வேண்டும் எனவும் ஹனா சிங்கர் அழைப்பு விடுத்துள்ளார்.

நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கை மக்களுக்கு உதவும் நோக்கில், நன்கொடைத் திட்டம் ஒன்றை, ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டம் ஆரம்பித்துள்ளதாகவும் தனது ட்விட்டர் பதிவில் தெரிவித்துள்ளார்.

நாங்கள் தற்போது இலங்கைக்கு உதவிகளை வழங்க வேண்டும். ஒவ்வொரு இலங்கையருக்கும் உணவு பாதுகாப்பு, மருத்துவம் போன்ற உதவிகளை வழங்குவதோடு, ஒவ்வொரு குழந்தைக்கும் கல்வி கற்கும் வாய்ப்பை நாம் ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும்.

நீங்கள் அனுப்பும் ஒவ்வொரு டொலரும் இலங்கை மக்களின் வாழ்க்கையையும் எதிர்கால குழந்தைகளையும் பாதுகாக்கும். எனவே, தற்போதே நன்கொடையை வழங்குங்கள். இலங்கைக்கு உதவும் திட்டத்தோடு இன்றே இணைந்துக்கொள்ளுங்கள் எனவும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

நன்கொடை வழங்க விரும்புவோர், www.undp.org/srilanka/donate என்ற இணையத்தளத்துக்கு பிரவேசித்து, நன்கொடையை வழங்க முடியும் எனவும் அவருடைய ட்விட்டர் பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஐ.நா.சபையில்...

நேற்று (19) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக பல்வேறு பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. அவை அனைத்தும் நிறைவேற்றப்பட்டதோடு, அந்தக் கதைகள் முடிந்துவிட்டன. ஆனால், இம்முறை அவ்வாறிருக்காது.

இம்முறை இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணை அதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டால், அந்த பிரேரணையிலுள்ள அனைத்து விடயங்களும் இலங்கைக்கு உதவிகளை வழங்குவதற்கான நிபந்தனைகளாக முன்வைப்பதற்கான வாய்ப்புள்ளது.

இலங்கை பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் இந்த சூழ்நிலையை பிரிவினைவாதிகள் தங்களுடைய நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்காக ஐ.நா. மனித உரிமைகள் பேரவை ஊடாக பாரிய முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றனர்.

எனவே, இலங்கை மோசமான நிலைமையில் சிக்கி தவிக்கும் போது, அதிலிருந்து தங்களுடைய நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ள முயற்சிப்பது மிக மோசமான செயல் என்பதை வெளிநாடுகளிலிருக்கும் இலங்கையர்களிடம் தெரிவிக்க விரும்புகின்றோம்.

## அறிக்கை கிடைத்த...

விவகார அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க 'தமிழன்' நாளிதழுக்கு நேற்று (19) தெரிவித்தார்.

திருக்கோணமலை நில ஆக்கிரமிப்பு தொடர்பாக தமிழ் தேசிய கூட்டமைப்பு தலைவர் ஆர்.சம்பந்தன் ஜனாதிபதிக்கு எழுதிய கடிதம் குறித்து வினவிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

திருகோணமலை விவகாரம் குறித்து கடந்த அமைச்சரவையிலும் பேசப்பட்டது. இதன் போது இந்த விடயம் குறித்து ஆராயுமாறு ஜனாதிபதி தனக்கு உத்தரவிட்டார். இதனையடுத்து திருகோணமலை விவகாரம் குறித்து உரிய அதிகாரிகளிடம் நான் அறிக்கையொன்றையும் கோரியுள்ளேன்.

இந்த அறிக்கை இவ்வாரத்தில் எனக்கு கிடைக்கும். கிடைத்த பின்னர் அடுத்தகட்ட நடவடிக்கையை தான் எடுக்கவுள்ளேன். அதற்கு முன்னர் இந்த விடயம் குறித்து எதனையும் கூற முடியாது. இதேவேளை, அறிக்கை தனக்கு கிடைத்த பின்னர் நான் நேரடியாக அங்கு சென்று கலந்துரையாடுவதற்கும் தீர்மானித்துள்ளேன் - என்றார்.

## உணவு பணவீக்கம்...

இலங்கை நான்காவது இடத்தில் உள்ளது.

இலங்கையில் உணவுப் பணவீக்கம் 91 சதவீதமாக உள்ளதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உலகிலேயே அதிக உணவுப் பணவீக்கம் உள்ள நாடு சிம்பாப்வே என்பதுடன், அந்நாட்டின் உணவுப் பணவீக்கம் 353 சதவீதமாக உள்ளது. லெபனான் மற்றும் வெனிசுவேலா முறையே இரண்டாவது மற்றும் மூன்றாவது இடத்தில் உள்ளன.

துருக்கி, ஈரான், ஆர்ஜென்டீனா, மோல்டோவா, எத்தியோப்பியா, ருவாண்டா ஆகிய நாடுகள் இந்தப் பட்டியலில் முதல் 10 இடங்களில் உள்ள நாடுகள் ஆகும்.

2021 செப்டெம்பர் மாதத்தில் இலங்கையில் உணவுப் பணவீக்கம் 9.9 சதவீதமாக இருந்ததுடன், கிட்டத்தட்ட ஒரு வருடத்தில் 90.9 சதவீதமாக பத்து மடங்கு அதிகரித்துள்ளது.

நாட்டில் கடந்த ஏப்ரல் மாதத்தில் இருந்து உணவுப் பணவீக்கம் வேகமாக அதிகரித்துள்ளது.

## உக்ரைனில் இலங்கையர்கள்...

புலனாய்வுத் துறையின் தலைவர் செர்ஹி பொல்வினோவ் தொடர்பான தகவல்களை தனது பேஸ்புக் பக்கத்தில் வெளியிட்டுள்ளார்.

அவரது தகவலின்படி,

உக்ரைன் மீதான ரஷ்யாவின் முழு அளவிலான படையெடுப்பு ஆரம்பித்தபோது, ஒரு பெண்ணும், 6 ஆண்களுமான இலங்கைக் குழுவொன்று குபியன்ஸ்க் பகுதியில் தங்கியிருந்தனர். அவர்கள் போர் ஆரம்பித்ததும், அச்சமடைந்து, வெளியேறிச் செல்லாமல் அங்கு ஒளிந்து கொள்ள முடிவு செய்தனர்.

மே மாதத்தில், அவர்கள் கார்கிவ் நகரை கால்நடையாக அடைய முயன்றனர். ஆனால், ரஷ்ய இராணுவ சோதனைச் சாவடியில் தடுத்து வைக்கப்பட்டனர். ரஷ்யர்கள் அவர்களின கைகளைக் கட்டி, தலையில் பைகளை வைத்து, வோவ்சான்ஸ்கில் உள்ள ஒரு தற்காலிக சிறைக்கு அழைத்துச் சென்றனர்.

இலங்கைப் பிரஜைகள் அங்கு மனிதாபிமானமற்ற நிலையில் வைக்கப்பட்டனர். அவர்கள் துப்புரவுத் தொழிலாளிகளாக வேலை செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். ஒரு பெண் இரண்டு மாதங்கள் தனிமைச் சிறையில் வைக்கப்பட்டார். அவர்களில் இருவரின் நகங்கள் கிழிக்கப்பட்டன. ஒருவர் தலையில் கதவால் தாக்கப்பட்டார்.

ரஷ்யர்கள் ஆங்கிலம் பேசாததால், ரஷ்யர்கள் என்ன விரும்புகிறார்கள், எதற்காக அவர்கள் சித்திரவதை செய்யப்பட்டார்கள் என்று இலங்கையர்களுக்கு ஒருபோதும் புரியவில்லை. சித்திரவதையின் போது ரஷ்யர்கள் 'அழநெல' (பணம்) என்று சொன்னது மட்டுமே அவர்களுக்குப் புரிந்தது. இதைப் பார்த்தால், உலகின் இரண்டாவது பெரிய இராணுவம் இலங்கையில் இருந்து வந்தவர்களை பணம் கேட்டு தடுத்து வைத்துள்ளது தெரிகிறது.

வோவ்சான்ஸ்க் பகுதி விடுவிக்கப்பட்ட பிறகு, இலங்கையர்கள் மீண்டும் கார்கிவ் நகருக்கு கால்நடையாகச் செல்ல முடிவு செய்தனர். வழியில் அவர்கள் ஒரு ஹோட்டல் காவலரைச் சந்தித்தனர். அவர் அவர்களுக்கு அடைக்கலம் அளித்து, அதைப் பற்றி உக்ரைனிய படையினருக்கு தெரிவித்தார்.

இது தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அந்நாட்டுப் பொலிஸார் இலங்கை தூதரகத்தை தொடர்பு கொண்டுள்ளதுடன், பாதிக்கப்பட்டவர்களுக்கு பாதுகாப்பான மற்றும் முறையான வாழ்க்கை நிலைமைகள் வழங்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்துள்ளார். ரஷ்யர்களால் கடந்த மார்ச் மாதம் முதல் சிறைபிடிக்கப்பட்டிருந்த ஏழு இலங்கைப் பிரஜைகள் கார்கிவ் மாகாணத்தின் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் மீட்கப்பட்டதாக செப்டெம்பர் 16 அன்று ஜனாதிபதி வோலோடிமிர் ஸெலென்ஸ்கி அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஐ.நா.பொதுச் சபை...

சனிக்கிழமை உரைநிகழ்த்தவுள்ளார்.

ஐ.நா.வின் 77 ஆவது பொதுச் சபைக் கூட்டத்தொடர் கடந்த 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமானது.

இன, மத, மொழி ரீதியாக சிறுபான்மையினருக்குரிய உரிமைகள் தொடர்பிலான பிரகடனம் ஏற்றுக்கொள்ளப்பட்டு 30 ஆண்டுகள் நிறைவைக் குறிக்கும் முகமாக நாளைய தினம் (21) உயர்மட்ட கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

உயர்மட்ட விவாத அமர்வில் கலந்துகொள்ளவுள்ள அமைச்சர் அலி சப்ரி தலைமையிலான குழு, சீன வெளிவிவகார அமைச்சர் வெங் யி, இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்ஷங்கர் உள்ளிட்ட முக்கியஸ்தர்களுடன் சந்திப்புகளை மேற்கொள்ளவுள்ளது.

இலங்கைத் தூதுக்குழுவில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி, நியூயோர்க்கில் உள்ள ஐ.நா.வுக்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதி மொஹான் பீரிஸ், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி மற்றும் நியூயோர்க்கில் உள்ள இலங்கையின் நிரந்தரத் தூதரக அதிகாரிகள் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

### மனித உரிமை மீறல் குற்றச்சாட்டு;

# ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் கால எல்லை டிசம்பர் மாதம் வரை நீடிப்பு

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள், சர்வதேச மனிதாபிமான சட்ட மீறல்கள் குறித்து முன்னைய ஆணைக்குழுக்கள் அல்லது குழுக்களால் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளை ஆராயும் வகையில் கோட்டாபய ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டிருந்த ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் ஆணைக்குழுவின் பதவிக்காலம் எதிர்வரும் டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20 ஆம் திகதி அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் மூவரடங்கிய விசாரணை ஆணைக்குழு நியமிக்கப்பட்டது.

ஆணைக்குழுவின் தலைவராக உயர் நீதிமன்ற நீதியரசர் ஏ.எச்.எம்.டி நவாஸ் நியமிக்கப்பட்டதுடன், ஓய்வுபெற்ற பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ மற்றும் ஓய்வுபெற்ற மாவட்ட செயலாளர் நிமால் அபேசிறி ஆகியோரும் அதில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மருத்துவமனையின் கவனயீனத்தால் நோயாளியொருவர் உயிரிழப்பு

**திருகோணமலையில் சோகம்**

*(திருமலை நிருபர்)*

திருகோணமலை பொது வைத்தியசாலையின் கவனயீனத்தால் நபரொருவர் உயிரிழந்த சம்பவமொன்று நேற்று (19)பதிவாகியுள்ளது.

திருகோணமலை மாவட்டம் குச்சவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இறக்கக்கண்டி நாலாம் வட்டாரத்தைச் சேர்ந்த இஸ்ஸதீன் முஹம்மட் தஸ்லீம் (29) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

குச்சவெளி தனியார் தொழிற்சாலையில் கடமையாற்றி வந்த நபர் கடந்த வெள்ளிக்கிழமை வயிற்று வலி காரணமாக தனியார் மருந்தகம் ஒன்றில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். தொடர்ந்து சிகிச்சைபெற்று வந்த நிலையில் அவருடைய வயிற்று வலி குணமடையாமையினால் நிலாவெளி பிரதேச வைத்தியசாலையில் கடந்த 17 ஆம் திகதி சனிக்கிழமை அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், அவர் மேலதிக சிகிச்சைக்காக நேற்று(19) திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு அழைத்து வரப்பட்டுள்ளார். வைத்தியசாலைக்கு அழைத்துவரப்பட்டதன் பின்னர் உயிரிழந்தவரின் சகோதரர் இஸ்ஸதீன் சியாம் தனது சகோதரர் வயிற்று வலி காரணமாக துடிதுடிப்பதாகவும், அவரை உடனடியாக கவனிக்குமாறும் தாதியர்களிடம் தெரிவித்துள்ளார்.

இருந்தபோதிலும், கடமையிலிருந்த வைத்தியரும், தாதியர்களும் குறித்த நோயாளியை பார்வையிடவில்லை எனவும் குறிப்பிடும் அதே நேரம், நேற்று நோயாளியை பார்வையிட வருகை தந்த நண்பர் குறித்த நோயாளி மயக்கமுற்று இருப்பதாக தாதியர்களிடம் தெரிவித்துள்ளார்.

அதனைத் தொடர்ந்து அவர் உயிரிழந்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. தமக்கு நியாயமான முடிவைப் பெற்றுத் தருமாறு உயிரிழந்தவரின் மனைவி பாத்திமா சஹ்ரா கோரியுள்ளார். உயிரிழந்தவரின் சடலம் திருகோணமலை பொது வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டதுடன், மரணம் தொடர்பிலான விசாரணைகளை குச்சவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## குழந்தைகளுக்கு...

தாயாரின் கைப்பைக்குள் இருந்த ரின்களை அங்கு தொழில்புரியும் ஊழியர்கள் கண்டுபிடித்துள்ளதுடன், அது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர். அதன் பிரகாரம் தம்பதியினர் கைதுசெய்யப்பட்டு பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதுடன், பிறிதொரு நாளில் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

இந்தத் தம்பதியினர் தெமட்டகொடையைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

## மருந்துகளுக்கு...

தேசிய வைத்தியசாலைகளில் மருந்து தட்டுப்பாடு கட்டுப்பாட்டுக்குள் இருந்தாலும் கிராமிய வைத்தியசாலைகளில் எவ்வித மருந்துகளையும் நோயாளர்களினால் பெற்றுக்கொள்ள முடியாத நிலைமை உருவாகியுள்ளதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

நோயாளர்களுக்கு தேவையான அத்தியாவசிய மருந்துகளை கொண்டுவருவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்காவிட்டால் ஆயிரக்கணக்கான மக்கள் உயிரிழக்கும் ஆபத்தான நிலைமை உருவாகும் என்றும் வைத்தியர்கள் எச்சரித்துள்ளனர்.

பல இடங்களில் தங்களுக்கு தேவையான மருந்துகளை பெற்றுக்கொள்வதற்கு வைத்தியசாலைகளுக்கு வருகை தருகின்ற போதிலும் உரிய மருந்தினை வைத்தியசாலை மருந்தகங்களில் பெற்றுக்கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதோடு, தனியார் மருந்தகங்களில் அந்த மருந்தின் விலையும் அதிகம் என்பதால் நோயாளர்கள் பெரும் பாதிப்பை எதிர்நோக்குகின்றனர்.

சிறுவர் வைத்தியாலைகளிலும் மருந்து தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் சிறுவர்களுக்கு தேவையான மருந்தினையும் தனியார் மருந்தகங்களில் அதிக விலைக்கு பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளதோடு, இருதய நோய், நீரிழிவு மற்றும் உயர் இரத்த அழுத்தம் போன்ற நோய்களுக்கு தேவையான மருந்துகளுக்கும் அரச மருந்தகங்ளில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் நோயாளர்கள் அதிக பாதிப்புகளை எதிர்நோக்குகின்றனர்.

மருந்து தட்டுப்பாடு குறித்து அகில இலங்கை வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் ஜயந்த பண்டார கருத்து தெரிவிக்கையில்,

தேசிய வைத்தியசாலைகள் உள்ளிட்ட வைத்தியசாலைகளில் வரையறைக்குட்பட்ட வகையில் மருந்துகள் விநியோகிக்கப்பட்டாலும் கிராமிய வைத்தியசாலைகளில் மருந்துகளுக்கும் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றன. சில வைத்தியசாலைகளில் எவ்வித மருந்தும் இல்லை.

இதேவேளை, மருந்து தட்டுப்பாடுகளுக்கு மத்தியில் மருந்துகளின் விலைகளும் பாரிய அளவில் அதிகரித்துள்ளன. நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம் போன்ற நோய்களுக்கான மருந்துகளின் விலைகள் எதிர்பாராத விதத்தில் அதிகரித்துள்ளன. இந்த நோய்களுக்கான மருந்துகளை சாதாரண விலையில் பெற்றுக் கொண்டால் மாதத்துக்கு 475 ரூபாவும் அதிக விலையுடைய மருந்தை பெற்றுக்கொண்டால் மாதத்துக்கு 2 ஆயிரத்து 750 ரூபாவும் செலவாகும்.

மருந்துகளின் விலைகள் அதிகரித்துள்ள போது இவற்றை பெற்றுக்கொள்வற்கு மக்களிடம் பணமில்லாதமையினால் நோயாளர்கள் மருந்துகளின்றி தவிக்கின்றனர். பணமில்லாதமையினால் அதிகமான நோயாளர்கள் மருந்துகள் அருந்துவதை தவிர்த்துள்ளனர். இது மிக ஆபத்தான நிலைமையாகும். அறுவை சிகிச்சையின் போது கைகளை கழுவுவதற்கான மருந்துகள் கூட இல்லாதமையினால் சவர்க்காரத்தில் கைகளை கழுவ வேண்டிய நிலைமைக்கு வைத்தியர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

எனவே, அத்தியாவசிய மருந்துகளை கொண்டுவருவதற்கு அரசாங்கம் உடனடியாக நிதியை ஒதுக்க வேண்டும். இல்லையேல், ஆயிரக்கணக்கான மக்கள் உயிரிழக்கும் ஆபத்துள்ளது. உயர் இரத்த அழுத்தத்துக்கான மருந்துகள் இல்லாதமையினால் ஆபத்தான கட்டத்திலுள்ள நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துவருகின்றன. நீரிழிவுக்கும் உரிய மருந்துகள் இல்லாதமையினால் காலப்போக்கில் கால்களை இழக்கும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கலாம். எனவே, மருந்து மாபியாவை இல்லாதொழித்து மக்களுக்கு தேவையான மருந்துகளை கொண்டுவருவதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும் - எனறார்.

## கோட்டாவைப்...

நேரத்திலாவது அது குறித்து கவலைப்படுவார்கள். கோட்டாபய ராஜபக்ஷவை போன்ற தலைவர் ஒருவரை எப்போதும் எங்களால் தேடிப்பிடிக்க முடியாது என நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

பத்தரமுல்லையிலுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

எங்களுக்கு எரிபொருள் மற்றும் எரிவாயு மாத்திரமே இறக்குமதி செய்ய வேண்டும். ஏனைய அனைத்தும் எங்களால் உற்பத்தி செய்துகொள்ள முடியும். ஆனால், கடன் பெற்று ஏனைய நாடுகளிலிருந்து அனைத்து பொருட்களையும் இறக்குமதி செய்தமையினால் நாங்கள் பாரிய பொருளாதார நெருக்கடிக்கு முகம்கொடுத்துள்ளோம்.

மக்கள் முகங்கொடுத்த நெருக்கடிகள் தற்போது வழமைக்கு திரும்புகின்றன. தட்டுப்பாடாக இருந்த எரிபொருள், எரிவாயு என ஒவ்வொன்றாக மக்களுக்கு கிடைக்க ஆரம்பித்துள்ளன. பொருட்களின் விலைகளையும் முடிந்தவரை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கான செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படுகின்றன. எனவே, அடுத்த வருடம் ஆரம்பிக்கும் போது இந்த நெருக்கடி நிலைமை வழமைக்கு திரும்பும் என எதிர்பார்க்கின்றோம்.

நாட்டிலுள்ள மக்கள் ஒவ்வொருவரும் இறக்கும் இறுதி தருணத்தில் அல்லது கடைசி மூச்சு இருக்கும் தருணத்திலாவது கோட்டாபய ராஜபக்ஷவை பதவியிலிருந்து நீக்குவதற்கு தலைமை தாங்கியவர்கள் கவலைப்படுவார்கள். கோட்டாபய ராஜபக்ஷவை போன்ற தலைவர் ஒருவரை எப்போதும் எங்களால் தேடிப்பிடிக்க முடியாது.

ஒரு சதமேனும் ஊழல் செய்யாத ஒரு தலைவராகவே அவர் இருக்கின்றார். அவர் ஆட்சிக்கு வந்த பின்னர் பாதாள குழுக்களின் துப்பாக்கிச்சூடுகள் இடம்பெறவில்லை. ஆட்சியில் இருந்தவரை எந்தவொரு போராட்டத்தின் மீதும் கண்ணீர்ப்புகையோ அல்லது தடியடி தாக்குதலோ நடத்தவில்லை. ஜனாதிபதி காரியாலத்தின் செலவை 1.7 பில்லியன் ரூபாவாக குறைத்தார். எனவே, சிறந்த ஒருவருக்கு இந்த நாட்டு மக்கள் ஆட்சியில் இருப்பதற்கு இடமளிக்கவில்லை. இது குறித்து தற்போது பேசுவதில் பயனில்லை. அவர் அரசியலிலிருந்து விலகியுள்ளார். மீண்டும் அவர் அரசியலுக்கு வருவதற்கும் எதிர்பார்க்கவில்லை – என்றார்.

## நாடாளுமன்றத்தை...

தொலைநகல் அனுப்புவதன் மூலம் அனுமதியைப் பெற்றுக்கொள்ளலாம் என நாடாளுமன்ற படைக்கல சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ தெரிவித்தார்.

அத்துடன் பல்கலைக்கழக மாணவர் குழுக்கள், அரச பதிவு செய்யப்பட்ட உயர்கல்வி நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கும் இதே நடைமுறை பின்பற்ற முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**தேசிய சபை – விவாதம் இன்று**

இதேவேளை, நாடாளுமன்றத்தில் புதிதாக அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள 'தேசிய சபை' என்ற பெயரில் அறியப்படும் நாடாளுமன்றக் குழு தொடர்பான பிரேரணை இன்று மு.ப. 10.30 மணி முதல் மாலை 5.30 மணிவரை விவாதிக்கப்பட்டு நாடாளுமன்றத்தில் அங்கீகரிக்கப்படவிருப்பதாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக தெரிவித்தார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கடந்த புதன்கிழமை (14) நடைபெற்ற நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்திலேயே இது தொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டது. செப்டெம்பர் 09ஆம் திகதி வெளியிடப்பட்ட ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தத்தில் 'தேசிய சபை' தொடர்பான பிரேரணை உள்ளடக்கப்பட்டுள்ளது.

இன்று முதல் 23ஆம் திகதி வரை நாடாளுமன்ற அமர்வு நடைபெறவிருப்பதுடன், 23ஆம் திகதி வெள்ளிக்கிழமை தவிர ஏனைய தினங்களில் மு.ப. 9.30 முதல் மு.ப.10.30 மணிவரை வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

நாளை 21ஆம் திகதி அரசாங்கத்தின் வருவாயை அதிகரிக்க வேண்டியதன் அவசியம் தொடர்பில் ஆளும் கட்சியினால் கொண்டுவரப்படும் சபை ஒத்திவைப்புப் பிரேரணைக்கு அமைய மு.ப. 10.30 மணி முதல் பி.ப. 5.30 மணி வரை விவாதத்தை நடத்துவதற்கும் இங்கு தீர்மானிக்கப்பட்டதாக செயலாளர் நாயகம் தெரிவித்தார்.

செப்டெம்பர் 22ஆம் திகதி மு.ப. 10.30 மணி முதல் பி.ப. 12.30 மணி வரை இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் (திருத்தச்) சட்டமூலம் (இரண்டாவது மதிப்பீடு) மற்றும் சிவில் விமான சேவை சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி என்பன விவாதத்தின் பின்னர் நிறைவேற்றப்படவுள்ளன. அதனைத் தொடர்ந்து பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 4.30 மணி வரை நாடாளுமன்ற நிலையியற் கட்டளைகளைத் திருத்துவது தொடர்பான விதப்புரை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

அதன் பின்னர் பி.ப. 4.30 மணி முதல் பி.ப. 4.50 மணி வரை சபை ஒத்திவைப்பு வேளையின் போதான கேள்விக்கும், பி.ப. 4.50 மணி முதல் பி.ப. 5.30 மணி வரை எதிர்க்கட்சியினரால் கொண்டுவரப்படும் சபை ஒத்திவைப்பு வேளையின் போதான பிரேரணையை விவாதத்துக்கு எடுக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

செப்டெம்பர் 23ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 12.30 மணி வரை இரண்டாவது எலிசபத் மகாராணியின் மறைவு குறித்த அனுதாபப் பிரேரணையையும், பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 5.30 மணி வரை மறைந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரல குறித்த அனுதாபப் பிரேரணையையும் விவாதத்துக்கு எடுக்க தீர்மானிக்கப்பட்டது.

# வவுனியாவை வந்தடைந்த திலீபனின் திருவுருவப் படம் தாங்கிய ஊர்தி

## மக்கள் உணர்வெழுச்சியுடன் அஞ்சலி









தியாக தீபம் திலீபனின் திருவுருடப்படம் தாங்கிய ஊர்தி நேற்று (19) வவுனியாவை வந்தடைந்த நிலையில், மக்கள் உணர்வெழுச்சியுடன் அஞ்சலி செலுத்தினர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் இளைஞர் அணியினரின் ஏற்பாட்டில் தியாக தீபம் திலீபனின் 35ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு திலீபன் வழியில் வருகின்றோம் என்ற ஊர்தி பவனியானது கிழக்கு மாகாணத்தின் பொத்திவிலில் ஆரம்பித்து யாழ். நல்லூர் நோக்கிச் செல்கின்றது.

5ஆம் நாளான நேற்று (19) குறித்த திலீபனின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்தி வவுனியாவுக்கு வருகைதந்த நிலையில், வவுனியா பண்டாரவன்னியன் சதுக்கம், பொங்கு தமிழ் நினைவுத்தூபி, காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் போராட்டத் தளம், மொத்த மரக்கறி விற்பனை நிலையம், இலுப்பையடி என நகரின் பல்வேறு பகுதிகளிலும் மக்கள் உணர்வெழுச்சியுடன் ஊர்தியில் இருந்த தியாக தீபம் திலீபனின் திருவுருவப்படத்திற்கு தீபம் ஏற்றியும் மலர் தூவியும் அஞ்சலி செலுத்தினர்.

காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் அகவணக்கத்துடன் தியாக தீபம் திலீபனுக்கு அஞ்சலி செலுத்தியிருந்ததுடன், சில பகுதிகளில் மக்கள் கண்ணீர் சிந்தி அஞ்சலி செலுத்தியதையும் அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

# வரலாற்றில் முதல் தடவையாக மக்களின் பொருளாதார உரிமைகளுக்கும் முன்னுரிமை

## கொலன்னாவையில் சஜித் தெரிவிப்பு



ஜெனீவாவில் மனித உரிமைகள் ஆணைக்குழு கூட்டத்தொடர் இடம்பெற்றுவரும்வேளையில், வரலாற்றில் முதல் தடவையாக மக்களின் பொருளாதார உரிமைகளுக்கும் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட கொலன்னாவ தேர்தல் தொகுதிக் கூட்டம் நேற்று முன்தினம் (18) இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்நாட்டு மக்கள் போராட்டத்தின் மூலம் ராஜபக்ஷர்கள் விரட்டியடிக்கப்பட்டார்கள். ஆனாலும் அவர்களைப் பாதுகாக்கும் வாயில்காப்பாளர் ஒருவர் பதவிக்கு வந்துள்ளதே இன்று நடந்திருப்பது.

இந்நாட்டு மக்களுக்கு பெரும் சேவையை ஆற்றிய ஐக்கிய தேசியக் கட்சி தற்போது முழுமையாக ராஜபக்ஷர்களுக்கு ஏலம் விடப்பட்டுள்ளது. இது குறித்து எனக்கும் பரிதாபமாக இருக்கிறது.

2019 ஆம் ஆண்டு சிலர் பிரசார மேடைகளில் ஏறி, சிறப்பாகக் காணப்பட்ட நாட்டை நாம் வீழ்த்தியுள்ளதாக தெரிவித்தார்கள். ஆனால், அந்தக் கதை செல்லுபடியாகும் அன்றா அல்லது இன்றா என்பது குறித்து புத்திசாலித்தமான மக்களுக்கு ஒரு புரிதல் உள்ளதாகவும் தெரிவித்தார்.

நல்லாட்சி ஆட்சிக்காலத்தில் பிரதமர் பதவியை ஏற்குமாறு பல தடவைகள் கேட்டுக்கொண்டபோதும், அத்தகைய எந்த சந்தர்ப்பங்களிலும் அதை ஏற்றுக்கொள்ளாமல் விட்டது அந்நேரத்தில் எனது தலைவரைப் புறக்கணித்தும் துரோகமிழைக்கும் எதிர்பார்ப்பும் என்னிடம் இருக்காததாலாகும். அன்றைய சட்டப்பூர்வமான பிரதமர் விக்கிரமசிங்கவே.

அப்போது அவர் எடுத்த கொள்கை ஒருபோதும் மாறாது. இன்று இந்நாட்டு மக்கள் மற்றும் போராட்டத்தின் புனித இலக்குகளை காட்டிக்கொடுத்தவண்ணம் பதவிகளைப் பெறும் எண்ணம் எனக்கு ஒருபோதும் இருந்ததில்லை. ஜனாதிபதி, பிரதமர் பதவியை நான் ஏற்கவில்லை - என்றார்.

இக்கூட்டத்தை கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடகப் பேச்சாளருமான எஸ்.எம்.மரிக்கார் ஏற்பாடு செய்திருந்தார். இதில் பெருந்திரளான ஆதரவாளர்கள் கலந்து கொண்டனர்.

# மஸ்கெலியா பிளாண்டேசனுக்கு உட்பட்ட தொழிலாளர்களுக்கு சம்பளம் வழங்கப்பட வேண்டும்

## இல்லையேல் பதிலடி தீவிரமாக இருக்கும் என்கிறார் செந்தில் தொண்டமான்

(க.கிஷாந்தன்)

"எவ்வாறு தொழிற்சங்க பலத்தைக் காட்ட வேண்டும் என்பது தொடர்பில் மறைந்த தலைவர் ஆறுமுகன் தொண்டமான், காங்கிரஸிலுள்ள எங்கள் அனைவருக்கும் சிறப்பாக பயிற்றுவித்துள்ளார். எதிர்வரும் 10ஆம் திகதி மஸ்கெலியா பிளாண்டேசனுக்கு உட்பட்ட பகுதிகளில் சம்பளம் வழங்கப்பட வேண்டும். அவ்வாறு இல்லையேல் எமது பதிலடி தீவிரமாக இருக்கும்" - என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மஸ்கெலியா பெருந்தோட்டத்தின் கீழ் இயங்கும் தோட்டங்களின் தோட்டத் தொழிலாளர்கள் கடந்த சில நாட்களாக தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இந்நிலையில், நேற்று முன்தினம் (18) மஸ்கெலியா அம்பாள்ஸ் மண்டபத்தில் குறித்த தோட்டத் தொழிலாளர்களை பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான் மற்றும் தலைவர், தவிசாளர், உறுப்பினர்கள் ஆகியோர் சந்தித்துக் கலந்துரையாடினர். இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்,

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

டொலரின் பெறுமதி அதிகரித்துள்ளதால் தேயிலை ஏற்றுமதிமூலம் சிறந்த வருமானம் கிடைக்கின்றது. தற்போதைய சூழ்நிலையில் தொழிலாளர் ஒருவர் 4 கிலோ பச்சைக்கொழுந்து எடுத்தால்தான் அவர்களின் சம்பளம் ஈடாகிவிடுகின்றது. அதற்கப்பால் பறிக்கப்படும் கொழுந்துமூலம் கம்பனிகளே இலாபம் அடைகின்றன.

அதாவது, நாளொன்றுக்கு சுமார் 6 ஆயிரம் ரூபாவரை உழைத்துக்கொடுத்துவிட்டே தொழிலாளர்கள் ஆயிரம் ரூபா பெறுகின்றனர்.

மஸ்கெலியா பிளாண்டேசன், எதிர்வரும் 10, 11ஆம் திகதிக்குள் தொழிலாளர்களுக்கு சம்பளம் வழங்க வேண்டும். மாறாக, இழுத்தடிப்பு இடம்பெற்றால், பெருந்தோட்டத்தை அரசாங்கம் சுவீகரிக்க வேண்டும். அரச நிறுவனத்தால் பராமரிக்க முடியவில்லையெனில், தொழிலாளர்களுக்கு காணியை பகிர்ந்தளிக்க வேண்டும். சௌமியமூர்த்தி தொண்டமான், ஆறுமுகன் தொண்டமான் போன்ற எமது மறைந்த தலைவர்கள் காங்கிரஸிலுள்ள அனைவருக்கும் தொழிற்சங்க நடவடிக்கை தொடர்பில் பயிற்சியளித்துள்ளனர். அவர்கள் காட்டிய வழியில் பயணிக்கின்றோம். எனவே, தொழிலாளர்கள் தளர்ந்துவிடக்கூடாது.

இதைவிட பயங்கரமான போராட்டங்களை நாம் முன்னெடுத்துள்ளோம். ஒற்றுமையாக இருங்கள் - என்றார்.

# கௌரவமான அரசியல் தீர்வை வலியுறுத்தி மன்னாரில் 50ஆவது நாளாகவும் கவனயீர்ப்புப் போராட்டம்



(மன்னார் நகர் நிருபர்)

கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வுக்கான மக்கள் குரல் எனும் தொனிப்பொருளில் வடக்கு - கிழக்கில் உள்ள 8 மாவட்டங்களில் 100 நாட்கள் நடைபெறவுள்ள செயல்திட்டத்தின் 50ஆவது நாள் கவனயீர்ப்புப் போராட்டம் வடக்கு- கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் நேற்று (19) மன்னார் கீரி கடற்கரைப் பகுதியில்இடம்பெற்றது.

வடக்கு, கிழக்கு மக்களுக்கு கௌரவமான அரசியல் தீர்வை நோக்கிய பயணத்தில் 50ஆவது நாளை முன்னிட்டு நேற்று (19) மன்னார் கீரி கடற்கரை பகுதியில் கௌரவமான அரசியல் தீர்வை வலியுறுத்தி பட்டம் ஏற்றப்பட்டிருந்தமை விசேட அம்சமாகும்.

சிறுவர்கள், மக்கள், சிவில் அமைப்புகள் மற்றும் பெண்கள் இணைந்து எமக்கு நிரந்தரமான அரசியல் உரிமை வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தனர்.

மேலும் பறக்கவிடப்பட்ட பட்டங்களில் எங்கள் நிலம் எமக்கு வேண்டும், நடமாடுவது எங்கள் உரிமை, பேச்சு சுதந்திரம் எங்கள் உரிமை, ஒன்றுகூடுவது எங்கள் உரிமை உள்ளிட்ட வசனங்கள் எழுதப்பட்டு பறக்கவிடப்பட்டன.

குறித்த நிகழ்வில் மன்னார் சமூக, பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் யாட்சன் பிகிராடோ, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இணையத்தின் இணைப்பாளர் எஸ்.திலீபன் குறித்த கிராம மட்ட அமைப்புகள், விவசாய, மீனவ சங்கங்கள், பெண்கள் அமைப்புகள், சிவில் சமூக அமைப்புகள், மனித உரிமை ஆர்வலர்கள், வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் பணியாளர்களும் கலந்து கொண்டார்கள்.

குறித்த போராட்டம் வடக்கு-கிழக்கு பகுதிகளில் தொடர்ச்சியாக சுழற்சி முறையில் 100 நாட்கள் வரை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.


## வாகனங்கள் விற்பனைக்கு விலைமனுக்கோரல்

| வாகன இலக்கம் | செசி இலக்கம் | தயாரிப்பு வகை |
|---|---|---|
| CP-DAE - 4XXX | MA1FA2HRRG6H20041 | DUAL PURPOSE VEHICLE MAHINDRA MAXXIMO PLUS |

- வாகனம் பரிசோதனை செய்தல் : வாகன பிரிவு, தெனகமுவ வத்த, தம்புள்ளை வீதி, யக்கஹாப்பிட்டிய, குருநாகல்.
- வாகனம் பரிசோதனை செய்யும் கால எல்லை : 2022 செப்டெம்பர் 21, 22ஆம் திகதிகளில் மு.ப 9.00 மணி முதல் பி.ப 4.00 மணி வரை. செப்டெம்பர் 23ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை மட்டும்.
- டென்டர் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி : 2022 செப்டெம்பர் 23ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை.
- டென்டர் பத்திரத்தின் விலை : ரூபா.250/- (மீளப்பெற முடியாது)
- டென்டர் பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டிய முகவரி : வாகன பிரிவு, தெனகமுவ வத்த, தம்புள்ளை வீதி, யக்கஹாப்பிட்டிய, குருநாகல்.
- டென்டர் பெட்டி வைக்கப்பட்டுள்ள, டென்டர் பத்திரம் அனுப்ப வேண்டிய முகவரி : வாகன பிரிவு, தெனகமுவ வத்த, தம்புள்ளை வீதி, யக்கஹாப்பிட்டிய, குருநாகல்.

**டென்டர் பத்திரங்களை தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ மேற்குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கையளிக்க முடியும். தபால் மூலம் அனுப்பும் டென்டர் பத்திர கடித உறையின் முன் பக்க இடது புற மேல் மூலையில் "வாகன விற்பனை" என்று குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். மேற் குறிப்பிடப்பட்டுள்ள வாகனம் தற்போதுள்ள நிலையில் பெற்றுக்கொடுப்பதுடன், டென்டர் கோருவதற்கு முன் அகற்றும் உரிமை நிறுவன வசமானதாகும்.**

முகாமையாளர்,
**கொமர்ஷல் கிரெடிட் அன்ட் பினான்ஸ் பீ.எல்.சீ.**
வாகன பிரிவு, தெனகமுவ வத்த, தம்புள்ளை வீதி, யக்கஹாப்பிட்டிய, குருநாகல்.
தொலைபேசி இல. 0112 000 000

COMMERCIAL CREDIT


# தியாகதீபம் திலீபனின் நினைவேந்தலுக்காக 15 பேரைக்கொண்ட பொதுக் கட்டமைப்பு



தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலை மேற்கொள்வதற்காக 15 பேரைக்கொண்ட பொதுக் கட்டமைப்பு தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலை மேற்கொள்ள பொதுக் கட்டமைப்பொன்றினை உருவாக்கி முன்னெடுப்பதற்கான கலந்துரையாடல் யாழ்ப்பாணத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்றது.

யாழ். மாநகர முதல்வர் வி.மணிவண்ணனின் ஏற்பாட்டில் நாவலர் கலாசார மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை (17)நடைபெற்ற கலந்துரையாடலின் தொடர்ச்சி நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நேற்று (19) இடம்பெற்றது.

கடந்த கூட்டத்தில் பொதுக் கட்டமைப்பு தொடர்பில் கலந்துரையாடப்பட்டு ஏழு பேர் கொண்ட பொதுக் கட்டமைப்புக்கான அழைப்பாளர் குழு தெரிவுசெய்யப்பட்டநிலையில் அந்தக் குழு, கலந்துரையாடலில் பங்கேற்காத அமைப்புகள், அரசியல் கட்சிகள் என்பனவற்றுடன் கலந்துரையாடி பொதுக் கட்டமைப்பை உருவாக்கி நினைவேந்தலை சிறப்பாக மேற்கொள்ள திட்டமிடப்பட்டநிலையில், மதகுருமார்கள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய பிரதிநிதிகள், அரசியல் கைதிகளுக்கான அமைப்பின் பிரதிநிதி, சிவில் சமூகப் பிரதிநிதிகள், காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள், முன்னாள் போராளிகள், மாவீரர்களின் பெற்றோர் என 15 பேரைக்கொண்ட பொதுக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.




தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2022, செப்டெம்பர் 20ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை

# ஐ.நா. கவனிக்க வேண்டிய முக்கிய விடயங்கள்!

இலங்கை தொடர்பில் பிரிட்டன் தலைமையிலான இணை அனுசரணை நாடுகளால் தயாரிக்கப்பட்டிருக்கும் புதிய பிரேரணையின் உள்ளடக்கம் தொடர்பில் பெருமளவிற்குத் திருப்தியடைய முடியாது எனவும், இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்துமாறு வலியுறுத்தப்படாமை முக்கிய குறைபாடு எனவும் தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51 ஆவது கூட்டத்தொடர் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமான நிலையில், அதற்கு முன்னதாகவே இம்முறை இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்துமாறு ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வலியுறுத்த வேண்டுமெனவும், அதற்கேற்றவாறான மிகவும் வலுவான பிரேரணையொன்றை பிரிட்டன் தலைமையிலான இணை அனுசரணை நாடுகள் கொண்டுவரவேண்டுமென்றும் பெரும்பாலான தமிழ்க்கட்சிகள் வலியுறுத்தியிருந்தன.

தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் கூறுகையில்,

***''இலங்கை தொடர்பில் பிரிட்டன் தலைமையிலான இணை அனுசரணை நாடுகளால் தயாரிக்கப்பட்டுள்ள பிரேரணையில் நாம் எதிர்பார்த்ததை விடக் குறைந்தளவிலான விடயங்களே உள்ளடக்கப்பட்டுள்ளன.***

***மிக முக்கியமாக இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்துமாறு வலியுறுத்தப்படுமென எதிர்பார்த்த போதிலும், அவ்விடயம் உள்ளடக்கப்படவில்லை.***

***அரசியல் காரணங்களுக்காகவும், வெறுமனே வாக்குமூலங்களின் அடிப்படையிலும் நீண்டகாலமாக சிறையில் அடைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தப்படும் என்றும், பயங்கரவாதத் தடைச்சட்டம், காணி அபகரிப்பு மற்றும் இராணுவமயமாக்கல் ஆகிய விடயங்கள் தொடர்பில் வலுவான கருத்துகள் முன்வைக்கப்படும் என்றும் எதிர்பார்த்தோம். இருப்பினும், அத்தகைய கருத்துகள் உள்ளடக்கப்படவில்லை. இப்பிரேரணையில் பல்வேறு விடயங்கள் எமக்குச் சார்பானவையாக அமையாதபோதிலும், கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையில் புதிதாகக் கொண்டுவரப்படும் ஒவ்வொரு பிரேரணையும் சற்று முன்னேற்றகரமானவையாகவே காணப்படுகின்றன''*** என்றார்.

அதேவேளை தமிழ்த்தேசியக்கூட்டமைப்பில் உள்ளடங்கும் தமிழீழ விடுதலை அமைப்பின் (ரெலோ) தலைவரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன்,

***''எமது மக்கள் நீதியைப்பெற்றுக்கொள்ளும் விவகாரத்தில் சர்வதேச சமூகத்தின் மீதே நம்பிக்கை வைத்திருக்கின்றார்கள். எனவே, அதற்கேற்றவாறு இணை அனுசரணை நாடுகள் செயற்படவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாக இருக்கின்றது. குறிப்பாக இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்துமாறு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையும், ஏனைய உறுப்பு நாடுகளும் வலியுறுத்த வேண்டியது அவசியமாகும்''*** என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும், பல்வேறு விவகாரங்களிலும் ஏனைய தமிழ்க்கட்சிகளிலிருந்து முற்றிலும் மாறுபட்ட நிலைப்பாட்டை வெளிப்படுத்தி வரும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி இவ்விடயத்தில் எத்தகைய நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின்றது என்பது குறித்துத் தெளிவுபடுத்திய அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.கஜேந்திரன், இலங்கை தொடர்பில் பிரிட்டன் தலைமையிலான இணை அனுசரணை நாடுகளால் தயாரிக்கப்பட்டிருக்கும் புதிய பிரேரணையின் உள்ளடக்கம் குறித்துத் தம்மால் திருப்தியடைய முடியாது என்று தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற படுகொலைகளுக்கு பொறுப்புக்கூறல் தொடர்பான ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் சமீபத்திய வரைவு தீர்மானம், 13 வருடங்களுக்கு முன்னர் இழைக்கப்பட்ட குற்றங்களுக்கு நீதி வழங்குவதில் அதன் அசட்டையை மீண்டும் காட்டுகிறது.

பல ஆண்டுகளாக வளர்ந்து வரும் இராணுவமயமாக்கல், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் மீதான அடக்குமுறைகள் மற்றும் மனித உரிமை மீறல்களைத் தொடர்ந்து அண்மைய ஐ.நா. தீர்மானம் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் உயிர் பிழைத்தவர்கள் இலங்கை அரசின் மீது நம்பிக்கை வைக்குமாறு கேட்டுக்கொள்கிறது. இதே இலங்கை அரசுதான் போர்க்குற்றவாளிகளை அரசாங்க அமைச்சுக்களின் தலைமைப் பொறுப்பில் நியமித்து பொறுப்புக்கூறலில் இருந்து விலகிக்கொண்டு வந்தது.

புதிய பிரேரணை மேலும் திருத்தங்களுக்கு உட்பட்டுள்ள நிலையில், இலங்கையின் நீண்டகாலப் பிரச்சினைகளுக்கு இதனூடாக பதில் கிடைக்கப் போவதில்லை என்பது தெளிவாகிறது. இது தமிழ் சமூகங்களுக்கு ஒரு அடி மட்டுமல்ல, ஐ.நா. என்ற சர்வதேச அமைப்பின் நம்பகத்தன்மையையும் சிதைக்கிறது. மாறாக, இலங்கையின் எதிர்காலம் குறித்து அக்கறை கொண்ட உறுப்பு நாடுகள், கொழும்பின் இடைவிடாத இராணுவ விரிவாக்கம் மற்றும் வளர்ந்து வரும் எதேச்சாதிகாரத்தை முடிவுக்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வடக்கு கிழக்கை முழுமையாக இராணுவமயமாக்கல் மற்றும் பாதுகாப்பு வரவு-செலவுத் திட்டத்தில் உடனடியாக அர்த்தமுள்ள குறைப்பைக் கோருதல்வேண்டும். மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டுள்ள இலங்கையின் மூத்த அதிகாரிகளுக்கு வெளிப்படையாகப் பெயரிட்டு இலக்கு வைக்கப்பட்ட தடைகளை விதிப்பது, உலகளாவிய அதிகார வரம்பு என்ற கோட்பாட்டின் கீழ் வழக்குத் தொடருமாறு உறுப்பு நாடுகளை வலியுறுத்துவதும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை என்ற சர்வதேச அமைப்பின் மீதான நம்பிக்கையை மீட்டெடுக்க உதவும்.

இலங்கை அரசின் அனைத்து அம்சங்களிலும் நீண்ட காலமாக ஊடுருவி கட்டுப்படுத்தி வரும் இனவாத சித்தாந்தத்தை கையாள்வதற்கான தெளிவான கோரிக்கை ஐக்கிய நாடுகள் சபை போன்ற சர்வதேச அமைப்புகளின் தீர்மானத்தில் வலியுறுத்தப்படவேண்டும்.

தமிழ் அரசியல் கட்சிகள் கொண்டுள்ள விசனத்தை இராஜதந்திரிகளும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையும் கவனத்தில் கொள்ளவேண்டியது கட்டாயமானது என்பதை வலியுறுத்திக் கூற விரும்புகிறோம்.

# அறிவும் தொழில்நுட்பமும்!

பவித்ரா நந்தகுமார்

**ஒரு** விஞ்ஞானி 1,093 கண்டுபிடிப்புகளைச் செய்து அவை அனைத்திற்கும் காப்புரிமை பெற்றிருக்கிறார் என்ற செய்தியை வாசித்தறிந்தபோது ஆச்சரியமாக இருந்தது. அவர் தான் தோமஸ் அல்வா எடிசன். அவரது கண்டுபிடிப்புகள் எவையும் சாதாரணமானவை அல்ல. மின்சார பல்ப் முதல் திரைப்படம் வரை மிகப் பெரிய கண்டுபிடிப்புகள் இதில் அடங்கும்.

அவர் எப்படி அதை சாதித்தார் தெரியுமா? தன்னுடைய அறிவு, அனுபவம் மட்டுமல்லாமல் அடுத்தவர் அறிவுடன் கூடிய அனுபவத்தையும் முழுமையாகப் பயன்படுத்தினார். ஒரு பொருள் பற்றிய ஆய்வில் ஈடுபடுவதற்கு முன் அப்பொருள் பற்றி அதுவரை வெளியான எல்லா நூல்களையும் படித்து விடுவார்.

அதுமட்டுமல்லாமல் பிறர் கண்டுபிடித்து நின்றுவிட்ட இடத்திலிருந்து தன் ஆராய்ச்சியைத் தொடங்குவார். இதனால் அவர்கள் செய்திருந்த தவறுகளைச் செய்யாமல் தன்னைக் காத்துக் கொள்ள முடிந்தது. அவர்களது பல வருட அனுபவங்களின் பயனை அவர் எடுத்துக் கொண்டதால்தான் இத்தனை மகத்தான சாதனைகளை தன் வாழ்நாளில் அவரால் நிகழ்த்த முடிந்தது.

பிறரின் அனுபவங்களைப் பயன்படுத்துவது அறிவியல் ஆய்வுக்கு மட்டுமல்ல, அனைத்துக்கும் பொருந்தும். ஒரு கதை நினைவுக்கு வருகிறது. குறிப்பிட்ட ஓர் இடத்தில் புதையல் இருப்பதாக யாருடைய வாய்மொழியையோ கேட்ட ஒரு மனிதன் பலநாள் பாடுபட்டு அந்த இடத்தில் நிலத்தைத் தோண்டினான்.

ஒரு மாத காலம் போராடி 40 அடி ஆழம் தோண்டினான். பின் அவன் மனம் சோர்ந்தான். நிச்சயமில்லாத ஒரு விடயத்தில் ஏன் நாம் சிரமப்பட வேண்டும் என்று எண்ணி, தோண்டுவதை அன்றோடு நிறுத்தி விட்டுச் சென்றுவிட்டான்.

சில நாட்களுக்குப் பிறகு அந்த வழியே சென்ற மற்றொருவனின் கண்களில் இந்த நிலம் தட்டுப்பட, அவன் முதலாமவன் விட்டுச் சென்ற இடத்திலிருந்து நிலத்தை இன்னும் ஆழமாக தோண்டத் தொடங்கினான். 50 அடி ஆழத்திலேயே அவனுக்குப் புதையல் கிடைத்தது. நம்பிக்கையோ, அதிர்ஷ்டமோ இக்கதையின் பேசுபொருள் அல்ல. பிறரது பணியின் பங்களிப்பு நம் பணியுடன் இணையும்போது ஏற்படும் முன்னேற்றமே இங்கு கவனிக்கப்பட வேண்டியது.

ஒரு தந்தையானவர் தான் அனுபவத்தில் கண்ட வியாபார நுணுக்கத்தை தனக்குப் பின் வியாபார பொறுப்பை ஏற்க வரும் தன் மகனுக்கு சொல்லிக் கொடுப்பார் இல்லையா? அதுபோலத்தான். தாம் கற்ற, கேட்ட, அறிந்த, தெளிந்த, கணித்த கூறுகளை மனிதன் புத்தகங்களாக எழுதிக் குவித்து வைத்துள்ளான். புத்தகங்களிலிருந்து பெறும் அனுபவங்களை நம் வாழ்வில் பயன்படுத்துவது கூட இந்த வகைதான்.

பிறருடைய பணத்தை எப்படி நான் ஏற்பதில்லையோ அதேபோல பிறருடைய அறிவையும் நான் பயன்படுத்துவதில்லை என்று இருப்போரும் உண்டு. வீடு கட்ட நல்ல திட்டமொன்றை சொன்ன உறவினரின் கூற்றை வேண்டுமென்றே நிராகரித்தார் நண்பர் ஒருவர்.

பிறரின் அறிவுரையும், ஆலோசனையும் எனக்குத் தேவையில்லை, அனைத்தையும் நானே பார்த்துக் கொள்வேன் என்ற மனநிலைதான் காரணம். உறவினரின் வழிகாட்டலைப் புறக்கணித்ததால் கால விரயமும், பண விரயமும் ஏற்பட்டதை உணர்ந்து நொந்தார் நண்பர்.

இப்படி வலிய வந்து அறிவுரை சொல்பவர் உயர்ந்தவர் இல்லை. அவர்கள் சொல்லும் திட்டங்களை நாம் செயல்படுத்துவதால் நாம் கீழ் நிலையில் இருப்பதாக அர்த்தமும் இல்லை. பரஸ்பரம் ஒரு கருத்துப் பரிமாற்றம், அவ்வளவே! அதில் பெரும் மனத் திருப்தியும் கிடைக்கிறது.

நம்முடைய வேலையைச் செய்ய ஊழியர்கள் பலரை நியமித்து பணிகளை பிரித்துத் தருகிறோம். இது எப்படி இயல்பானதோ, அப்படி இயல்பானதுதான் பிறர் அறிவையும், அனுபவத்தையும் நாம் பெறுவதும்.

“மெய், வாய், கண், மூக்கு, செவி என்று புலன்களின் வழியாக அறிந்த வகையில் அறிவு ஐந்து; புலன்களால் உற்று அறிந்தவற்றையெல்லாம் மனத்தினுள் வாங்கிக் கொண்ட வகையில் அறிவு ஆறு; வாங்கிக் கொண்டவற்றையெல்லாம் வகைப்படுத்தித் தொகுத்து, உணர்ந்துகொண்ட வகையில் அறிவு ஏழு; கல்வியுடன் சேர்ந்து பெற்ற அறிவு எட்டு; கல்வி அனுபவத்துடன் ஒன்பது; இறையருளைப் பற்றும் அறிவு பத்து” என பத்து வகையான அறிவுகளைப் பற்றி பேசுகிறது திருமூலரின் திருமந்திரம்.

ஆனால், இன்றைய நவீன காலத்தில் இவற்றையெல்லாம் தாண்டி நாம் பலவற்றை பலரிடமிருந்து பெற்று நம் அறிவுத்திறனை மேம்படுத்திக் கொள்ள முனைய வேண்டியதாக உள்ளது. ஆசிரியர் ஒருவர், தன் மாணவனுக்கு தனக்கு தெரிந்த அத்தனை விடயங்களையும் அவனது தேவைக்கேற்ப வழங்குகிறார். தன்னுடைய ஐம்பதாவது வயதில் தான் கற்றதைக் கூட 15 வயது மாணவனுக்கு விளக்குகிறார். ஆசிரியர்களைத் தவிர வேறு யாருக்கும் நம்மிடம் நின்று பேசவோ, அறிவுரை சொல்லவோ இன்று நேரம் கிடையாது. பந்தயக் குதிரைகளின் மீதேறி ஓடுவதுபோல் அவரவர் ஒவ்வொரு திசையில் ஓடிக் கொண்டிருக்கின்றனர்.

ஆசிரியருக்கு அடுத்து மாணவனுக்கு தனிப்பட்ட முறையில் அறிவு தானம் வழங்கி அவனை முன்னேற்றப் பாதைக்கு இட்டுச் செல்ல யாரும் இருப்பதில்லை. அப்படி இருந்தாலும் அவர்களை விரல்விட்டு எண்ணிவிடலாம். அப்படி இருப்பவர்களும் நமக்கு பொருந்தும்படியாக நம் அலைவரிசைக்கு ஒத்துப் போகும் வண்ணம் இருப்பார்களா என்பது கேள்விக்குறிதான்.

ஒரு சமயம் ஒரு கருத்தரங்கிற்குச் சென்றிருந்தேன். அங்கு வந்திருந்த பெரியவர்கள் உயரிய கருத்துக்களை எடுத்துரைத்த வண்ணம் இருந்தனர்.

கூட்டத்தில் அமர்ந்திருந்த ஒருவர் எழுந்து, “இத்தகைய சிறந்த கருத்துகளை தாங்கள் எப்படி பெற்றீர்கள்? அதை நாங்களும் பெற எங்களுக்கு வழிகாட்ட வேண்டும்” என்று வேண்டினார்.

அதற்கு அந்தப் பெரியவர், “நான் பல வருடங்கள் செலவளித்து இதைக் கற்றேன். நீங்களும் உங்கள் சொந்த முயற்சியில் தேடித் தேடி கற்று முன்னேறுங்கள்” என்று கூறிச் சென்றார். இந்த உலகமே இப்படித்தான். தான் அரும்பாடுபட்டு பெற்றதை பிறர் சுலபமாக பெறுவதை பலர் விரும்புவதில்லை. இதனால்தான் நாம் மனிதர்களை காட்டிலும் தொழில்நுட்பத்தை அதிகம் கைக்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. அது இந்த நவீன காலத்தில் ஏற்புடையதாகவும் இருக்கிறது.

முன்னணி தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுள் ஒன்று சில தினங்களுக்கு முன் தன் புதிய தயாரிப்பை சந்தையில் அறிமுகப்படுத்தியது. அறிமுகமான சில மணிநேரத்திற்குள்ளாகவே அதை விலை கொடுத்து வாங்க ஒரு கூட்டமே அலைமோதுகிறது. ஏனென்றால், இதே உளவியல்தான். மனிதர்களிடையே, நட்பு வட்டத்தினரிடையே, உறவுகளிடையே பிறர் அறிவை பயன்படுத்த இங்கு ஓர் இடைவெளி விழுந்துவிட்டதால் மனிதன் தொழில்நுட்பத்தை அதிக அளவு பயன்படுத்தத் தொடங்கிவிட்டான்.

தனக்கென்று நம்பகமானவர்களை வைத்துக் கொள்ள அவனுக்கு தொழில்நுட்பம் சுலபமாகக் கைகொடுக்கிறது. கேட்டதை வழங்கும் காமதேனுவைப் போல அவன் தேடுவனவற்றையும், அவனுக்கு தேவைப்படும் அனைத்தையும் தன் தகவல் சுரங்கத்திலிருந்து வாரி வழங்குகிறது. எட்டாம் அறிவான தகவல் தொழில்நுட்பத்தின் அறிவையும் மனிதன் பயன்படுத்தத் தொடங்கியிருப்பதால் அவன் பல விடயங்களில் தன்னம்பிக்கை உடையனவாக இருக்கிறான்.

ஒரு தாய், தன் குழந்தைக்கு உடல்நலமாக இருக்கும்போது திட உணவையும், காய்ச்சலாக இருக்கும்போது கஞ்சியையும் கொடுப்பாள். அவளுக்குத் தெரியும் தன் குழந்தைக்கு எந்தெந்த காலத்தில் என்னென்ன தரவேண்டும் என்பது. பிள்ளைகளுக்கு எப்படி தாய் பார்த்து பார்த்து சமைத்து கொடுப்பாளோ, அதே போன்ற பங்களிப்பை செய்ய வந்துவிட்டது “ஆர்ட்டிஃபிஷல் இன்டலிஜென்ஸ்” எனும் செயற்கை நுண்ணறிவு.

இணையம் 3.0 வின் சாராம்சமே அதுதான். இந்த செயல்திறன் அறிவாற்றல், நமக்கு என்ன தேவையோ அதனைப் பார்த்து பார்த்து அறிந்து சேவையாற்றும். நம்முடைய உதவியாளர் நம்மிடம் கடமைக்காக வேலை செய்யாமல் தாயன்புடன் நமக்கு சேவையாற்றுவது போல. இப்படி அறிவுசார்ந்த விடயத்தில் தகவல் தொழில்நுட்பம் உடன் வருவதால் ஒவ்வொரு தனிநபரின் அறிவார்ந்த பலமும் கூடுகிறது.

இந்த நவீன யுகத்தில் தொழில்நுட்பம் வழி பெறப்படும் அறிவு மிளிர்ந்து அது எவ்வித பாகுபாடும் இன்றி அனைவருக்கும் பயன்படும் விதமாக முன்னேற்றம் அடைந்துள்ளது.

“எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு”

எனும் திருவள்ளுவரின் கூற்றுக்கு ஏற்ப தொழில்நுட்பத்தின் வழி பெற்றாலும் அதன் உண்மைத் தன்மையை ஆராய்ந்து தெளிந்து கொள்ள வேண்டியது அவசியமாகிறது. மனித சக்தி எல்லையில்லாதது. அது தொழில்நுட்ப அறிவுடன் இணையும்போது அந்த எல்லையின் பரப்பு இன்னும் இன்னும் விரிவடைந்துகொண்டே போகிறது. ஒரு விஞ்ஞானியின் மூளையில் பொதிந்திருக்கும் பொக்கிஷமான தரவுகள் அனைத்தையும் சிந்தாமல் சிதறாமல் அவருக்குப்பின் அடுத்தவர் மூளைக்குள் மடைமாற்றும் ஆய்வுகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன.

“சென்றிடுவீர் எட்டுத்திக்கும் கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்” என்ற பாரதியின் கூற்றும் இக்கருத்துக்குப் பொருந்துவதாக இருக்கிறது. ஆக, பிறரது அறிவையும், ஆலோசனைகளையும் பயன்படுத்தி முன்னேறுவது வெகு இயல்புதான். அது அனைத்துத் துறைகளிலும் உள்ளதுதான் என்பதை மனத்தில் இருத்தி முன்னேறுவோம்.

# தீப்பிடிக்காத படலம்



**மே**ற்கத்தேய நாடுகளில், இன்றும் மரத்தால் வீடு கட்டுவது வழக்கத்தில் உள்ளது. பல அடுக்கு மாடிக் கட்டங்களைக் கூட முழுக்க முழுக்க மரத்தாலேயே கட்ட முடியும் என்று நிரூபித்து வருகின்றனர் மேற்கத்தேய கட்டடக்கலை வல்லுனர்கள்.

இந்த நிலையில், மரத்தின் மேல் தீயே பிடிக்காதபடி செய்யும் தொழில்நுட்பத்தை சிங்கப்பூரிலுள்ள நான்யாங் தொழில்நுட்ப பல்கலையைச் சேர்ந்த விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர். அவர்கள் படைத்துள்ள தீத்தடுப்பு திரவத்தை வெறும் 0.075 மில்லி மீற்றர் தடிப்பத்துக்கு மரத்தின் மேல் பூசிவிட்டால் போதும்.

இந்த பூச்சிற்கு வண்ணம் கிடையாது என்பதால், மரத்தின் ரேகைகள், பூச்சுக்குப் பிறகும் அப்படியே தெரியும். இந்தப் பூச்சின்மேல் தீச்சுவாலையை படச் செய்தால், பூச்சு 30 மடங்கு தடிப்பம் அதிகரித்து, அடியிலுள்ள மரத்தை தீப்பிடிக்காமல் காக்கிறது. இந்த பூச்சு எரிந்தாலும் அதிக புகை வருவதில்லை.

# பசுமை மின் பலகைகள்

**ப**சுமை மிகு சுவிட்சர்லாந்தில், விவசாயிகள், மண் மேல் விவசாயத்திலிருந்து, பசுமைக் குடில்களில் விவசாயம் செய்யும் முறைக்கு வேகமாக மாறி வருகின்றனர்.

ஆனால், அவர்களுக்கு மின்சாரச் செலவு மட்டும் அதிகரித்துள்ளது. இதைத் தடுக்க, பசுமைக் குடில்களுக்கென்றே, சிறப்பு சூரிய மின் தகடுகளை கண்டுபிடித்துள்ளது வோல்டிரிஸ் (Voltiris) என்ற புத்திளம் நிறுவனம். வழக்கமாக, கூரை மேல் சூரிய மின் பலகைகளை வைத்தால், கீழே சூரிய ஒளி வராது. ஏனெனில், சூரிய மின் தகடுகள் ஒளியைத் தடுத்து மின்சாரமாக மாற்றவேண்டியுள்ளது. ஆனால், வோல்டிரிசின் நிறுவனர்கள் உருவாக்கியுள்ள, சூரிய மின் பலகைகள், கண்ணாடி போல கூரையிலிருந்து சூரிய ஒளியை பசுமைக் குடிலுக்குள்ளே அடுக்கப்பட்டிருக்கும் செடிகளின் மீது விழ அனுமதிக்கின்றன.

பின் மின்சாரம் தயாரிப்பது எப்படி? செடிகளுக்கு சூரிய ஒளிக் கதிரிலுள்ள



வண்ணங்களில் நீலம் மற்றும் சிவப்பு ஆகியவற்றைத் தான் கிரகித்து, பச்சையம் தயாரிக்கின்றன. மீதி உள்ள அகச் சிவப்பு மற்றும் பச்சை வண்ண ஒளிக்கற்றைகள், போட்டோவோல்டாயிக் செல்களின் மீது பட்டு மின்சாரத்தை உற்பத்தி செய்து தருகின்றன. இதனால் பசுமைக் குடில்களின் 60 - 100 சதவீத மின் தேவையை வோட்ரிசின் சூரிய ஒளிப் பலகைகள் பூர்த்தி செய்துள்ளன.

இத்தகைய தொழில்நுட்பம் நடைமுறைக்கு வந்தால், விவசாயிகள், மின்சார அறுவடையையும் செய்ய முடியும்.

# நக்கல் நமசிவாயம்




# இன்றைய நாளில்...

★ 1878 – ‘தி இந்து’ முதலாவது இதழ் வெளியிடப்பட்டது.

★1893 – அமெரிக்காவில் முதன்முதலாக தயாரிக்கப்பட்ட பெற்றோலினால் இயங்கும் தானுந்து சோதிக்கப்பட்டது.

★1932 – மகாத்மா காந்தி பூனே சிறையில் உண்ணாநோன்பை ஆரம்பித்தார்.

★1945 – மகாத்மா காந்தியும், ஜவஹர்லால் நேருவும் பிரித்தானியப் படைகளை வெளியேறக் கோரினர்.

★1946 – போரினால் 7 ஆண்டுகள் நடத்தப்படாதிருந்த கான் திரைப்பட விழா இடம்பெற்றது.

★1966 – சேர்வெயர் 2 விண்கலம் சந்திரனை நோக்கிச் செலுத்தப்பட்டது.

★1990 – சவுக்கடி படுகொலைகள்: இலங்கை, மட்டக்களப்பு, ஏறாவூர்ப்பற்றில் சவுக்கடி கிராமத்தில் பெண்கள், குழந்தைகள் உட்பட 30 தமிழர்கள் இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டு, தீயிட்டு எரிக்கப்பட்டனர்.

★1993 – துருவ செயற்கைக்கோள் ஏவுகணையை இந்தியா ஏவியது.

2001 – அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் “பயங்கரவாதத்திற்கு எதிரான போரை” அறிவித்தார்.

★2017 – சூறாவளி மரியா புவேர்ட்டோ ரிக்கோவைத் தாக்கியதில் 2,975 பேர் உயிரிழந்தனர்.

# நாட்டில் வரலாறு காணாத பாரதூர மருந்துத் தட்டுப்பாட்டு

## நிர்வகிக்கும் வியூகம் அமைச்சுக்குத் தெரியாமையே நிலைமைக்குக் காரணம் என்கிறார் ராஜித எம்.பி.



மருந்துகளின் விலைகளை தீர்மானிக்கும் பொறுப்பு மருந்து இறக்குமதியாளர்களிடம் இருப்பதால் மருந்துத் தட்டுப்பாடு பாரதூரமானதாக மாறியுள்ளது. இந்த நிலைமையை நிர்வகிக்கும் வியூகம் தெரியாததால் அமைச்சும் அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கும் செயற்பாடுகளை கைவிட்டுள்ளதாக முன்னாள் சுகாதார அமைச்சரும், ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

மந்தபோசணை நிலை நாட்டில் இருக்கின்ற தென்பது உண்மை. குறித்த அறிக்கைகள் இரண்டும் நாட்டில் பொருளாதார நெருக்கடி தோற்றம் பெறுவதற்கு முன்னரே தயாரிக்கப்பட்டவையாகும். 2016ஆம் ஆண்டுக்கான யுனிசெப்பின் அறிக்கையில் 2014 ஆம் ஆண்டு இருந்த நிலைமையே சுட்டிக்காட்டபட்டுள்ளது. ஐந்து அல்லது 24 மாதங்களிலேயே குழந்தையின் மந்த போசணை நிலைமையை அவதானிக்க முடியும். மேலும், 2021ஆம் ஆண்டு அறிக்கை சுகாதார அமைச்சினால் முன்னெடுக்கப்பட்து. அது நாடாளுமன்றத்திலும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

2021ஆம் ஆண்டுஅறிக்கையில் 2019 ஆம் ஆண்டு பெற்றுக்கொண்ட தரவுகளே உள்ளடக்கப்பட்டுள்ளன. 2019ஆம் ஆண்டாகும்போது சிறுவர்களுக்கான போஷாக்கு நிலைமை சிறந்து காணப்பட்டுள்ளது. எனவே, பொருளாதார நெருக்கடி நிலைமையின் பின்னர் நாட்டின் போசணை நிலைமை குறித்து சுட்டிக்காட்டப்படவில்லை.

இருந்தபோதும், அந்த காலப்பகுதிகளில் உலக உணவுத்திட்டம் மற்றும் சுகாதார அமைச்சினால் சிறுவர்களின் போஷாக்கு குறித்து வேலைத்திட்டங்களையும் முன்னெடுத்து வந்திருந்தது. அதனடிப்படையில் இந்த அறிக்கைகளை ஒப்பிட்டு பார்க்கையில் நிலைமை மிகவும் மோசமானதாகவே அமையும்.

அதேபோன்று மருந்துத் தட்டுப்பாடு மிகவும் மோசமான நிலையாகும். மிகவும் பயங்கரமானது. இதுவரையான வரலாற்று காலப்பகுதியில் இதுபோன்ற மருந்துத் தட்டுப்பாடு நாட்டில் ஒருபோதும் ஏற்பட்டிருக்கவில்லை. நான் சுகாதார அமைச்சராக இருந்த காலப்பகுதியில் மருந்து தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்கு மென்பொருளொன்றை உருவாக்கி நடவடிக்கை எடுத்திருந்தோம். அதன் பின்னர் மருந்து தட்டுப்பாடு இருக்கவில்லை.

ஆனால், தற்போதுள்ள நிலைமையில் தனியார் பிரிவுகளிலும் மருந்து இல்லாத நிலை நிலவுகின்றது. தனியார் பிரிவுகளிலும் ஒருசில மருந்துகள் இல்லை. உயிரை பாதுகாக்கப் பயன்படுத்தும் மருந்துகள் அரச மருத்துவமனைகளிலோ அல்லது தனியார் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ள முடியாத நிலையே தற்போதுள்ளது. மேலும், அத்தியாவசிய மருந்துகளை தொடர்ந்து உட்கொண்டால் மாத்திரமே நோய்களிலிருந்து விடுபட முடியும். ஆனால், அந்த மருந்துகளுக்கும் பாரிய தட்டுப்பாடு நிலவுகின்றது. இந்த நிலைமையினால் உயிராபத்துகளே அதிகரிக்கும். மற்றைய காரணம் என்வென்றால், இருப்பிலுள்ள ஏனைய மருந்துகளின் விலையும் அதிகமாகும். அதற்கு காரணம் மருந்து இறக்குமதியாளர்களுக்கு ஏற்றவாறு சந்தை பயன்படுத்தப்படுகின்றது. இந்த நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து நிர்வாகிப்பதற்கான அனுபவம் தற்போதுள்ள அமைச்சுக்கு இல்லை. இதனை எவ்வாறு நிர்வகிப்பது, நிர்வகிப்பதற்கு தேவையான வியூகங்களை எவ்வாறு அமைப்பது என்பது தற்போதுள்ள அமைச்சு அதிகாரிகளுக்கு தெரியவில்லை. அறியாமையின் காரணமாக, நிர்வாகத்தைக் கைவிட்டு விட்டார்கள். அதனை சாதகமாகப் பயன்படுத்தி கொண்டு விருப்பத்துக்கேற்றவாறான விலைகளில் மருந்துகள் இன்று விற்பனை செய்யப்படுகின்றன என்று குறிப்பிட்டார்.



நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி நிலைமையை கருத்தில் கொண்டு பொதுமக்களின் கையொப்பம் பெறும் நிகழ்வு, கொழும்பு கோட்டையில் நேற்று (19) தேசிய தேரர்கள் முன்னணியினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

## வன்முறைகளின்றி முறையாகப் போராடுவோம்
### ராமேஷ்வரன் எம்.பி. தெரிவிப்பு

(க.கிஷாந்தன்)



மஸ்கெலியா பிளாண்டேஷனானது, தோட்டத் தொழிலாளர்களுக்கு உரிய வகையில் சம்பளம் வழங்க நடவடிக்கை எடுக்காவிட்டால், மாற்று நடவடிக்கையில் இறங்க வேண்டிய நிலை எமக்கு ஏற்படும் - என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும், நிதி செயலாளரும், நுவரெலியா மாவட்ட எம்.பியுமான மருதபாண்டி ராமேஷ்வரன் தெரிவித்தார்.

மஸ்கெலியா பெருந்தோட்டத்தின் கீழ் இயங்கும் தோட்டங்களின் தோட்டத் தொழிலாளர்கள் கடந்த சில நாட்களாக தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டனர். இந்நிலையில், நேற்று முன்தினம் (18) மஸ்கெலியா அம்பாள்ஸ் மண்டபத்தில் குறித்த தோட்டத் தொழிலாளர்களை பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமான் மற்றும் தலைவர், தவிசாளர் உறுப்பினர்கள், ஆகியோர் சந்தித்து கலந்துரையாடினர்.

இந்த சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

மஸ்கெலியா பெருந்தோட்டக் கம்பனியே மிக மோசமான நிறுவனமாக உள்ளது. நஷ்டம், நஷ்டம் எனக் கொக்கரிக்கும் சில கம்பனிகள், நஷ்டம் என்றால் எதற்கு தொடர்ந்தும் இயங்க வேண்டும்? தோட்டங்களை அரசாங்கத்திடம் ஒப்படைக்கலாம் அல்லவா? நிர்வாகங்கள் இலாபம் உழைக்கின்றன. ஏமாற்று வித்தையாகவே நஷ்டம் என்ற கதை கூறப்படுகின்றது.

ஆண் மற்றும் பெண் தொழிலாளர்கள் எட்டு மணிநேரம் வேலை செய்ய வேண்டுமாம். சரி நாம் வேலை செய்கின்றோம். 8 மணிநேரத்தில் 2 கிலோதான் கொழுந்து பறித்தால் என்ன செய்ய முடியும்? ஆக தொழிலாளர்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டும்.

வன்முறைகள் வேண்டாம். முறையாக போராடுவோம். தொழிற்சங்கங்கள், கொழும்பில் ஒன்று கூடி பேச்சு நடத்தினோம். இது விடயத்தில் இணைந்து செயற்பட தீர்மானிக்கப்பட்டது. காங்கிரஸ் என்றும் தொழிலாளர் பக்கம் நிற்கும் - என்றார்.

## தங்கச் சங்கிலியை அபகரித்த பொலிஸ் அதிகாரி கைது

(ஏ.ஏ.எம் பாயிஸ்)

வீதியில் சென்று கொண்டிருந்த பெண்ணொருவரின் தங்கச் சங்கிலியை அபகரித்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரை கல்தோட்ட பொலிஸார் நேற்று கைதுசெய்துள்ளனர்.

குறிப்பிட்ட பெண்ணின் தங்கச் சங்கிலியை மோட்டார் சைக்கிளில் வந்த ஒருவர் அபகரித்துச் சென்றதை அறிந்த பலாங்கொடை கல்தோட்டைப் பொலிஸார் பெண்மணி காட்டிய திசையில் சென்று அவரைத் துரத்திப் பிடித்துள்ளனர்.

அத்துடன் இச்சந்தேக நபர் பயணித்த மோட்டார் சைக்கிளும் மீட்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் நடத்தப்பட்ட விசாரணைகளின்போது சந்தேகநபர் ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் என்பதும், அவர் கல்தோட்டை பொலிஸ் நிலையத்தால் நிர்வகிக்கப்படும் கூறகல பொலிஸ் காவலரணில் கடமையாற்றுபவர் என்பதும் தெரியவந்துள்ளது.

இவர் மேலும் பல தங்கச் சங்கிலி அபகரிப்பு சம்பவங்களுடன் தொடர்புடையவர் என்பதும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. கல்தோட்ட பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.









நடப்பாண்டுக்கான சர்வதேச புத்தகக் கண்காட்சி கடந்த 16 ஆம் திகதி கொழும்பு, பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பமானது. இந்தக் கண்காட்சியில் நேற்று முன்தினம் (18) பெருந்திரளான மக்கள் பங்குபற்றியிருந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. (படப்பிடிப்பு – சமன் அபேசிறிவர்தன)

## கௌரவமான அரசியல் தீர்வினைக் கோரி அரியாலை கிழக்கில் பட்டம் ஏற்றிப் போராட்டம்





(சாவகச்சேரி நிருபர்)

வடக்கு-கிழக்கு மக்களுக்கான கௌரவமான அரசியல் தீர்வினை வழங்கக் கோரி நேற்று (19) அரியாலை கிழக்கில் பட்டம் ஏற்றி கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்பு அமைப்பினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நூறு நாள் செயல் முனைவுப் போராட்டத்தின் 50 ஆவது நிறைவு நாளை முன்னிட்டு குறித்த பட்டம் ஏற்றி அரசியல் தீர்வைக் கோரிய கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதில் சட்டத்தரணி அம்பிகா சிறிதரன் கலந்துகொண்டு அரசியல் தீர்வின் முக்கியத்துவம் தொடர்பாக மக்களுக்கு விளக்கமளித்திருந்தார்.

## பாவற்குளம் பாலர் பாடசாலை கட்டடத் திறப்பு விழா!





அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீனின் நிதி ஒதுக்கீட்டில், வவுனியா, பாவற்குளம் கிராமத்தில் புதிதாக அமைக்கப்பட்ட பாலர் பாடசாலை கட்டடத் திறப்பு விழா நேற்று முன்தினம் (18) இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் பதியுதீன் கலந்துகொண்டதுடன், அங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மக்கள் சந்திப்பிலும் பங்கேற்றிருந்தார்.

## பேராதனை பல்கலைக்கழக மாணவனை காணவில்லை

பேராதனை பல்கலைக்கழக மாணவன் ஒருவர் காணாமல்போனமை தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

பேராதனை பல்கலைக்கழகத்தின் நான்காம் வருட மாணவன் ஒருவரே காணாமல்போயுள்ளதாக பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது.

கலைப்பீடத்தில் நான்காம் ஆண்டில் கல்வி கற்கும் யக்கல பிரதேசத்தைச் சேர்ந்த குறித்த 24 வயதுடைய மாணவன் சில தினங்களுக்கு முன்னரிலிருந்து காணாமல் போயுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் காணாமல்போன இளங்கலை மாணவன எழுதியதாக சந்தேகிக்கப்படும் கடிதம் ஒன்று அவர் தங்கியிருந்த அறையிலிருந்து கடந்த வெள்ளிக்கிழமை கண்டெடுக்கப்பட்டதாக தெரியவருகிறது.

எனினும், நேற்றுக் காலை வரை அவரைப் பற்றி எந்தத் தகவலும் இல்லை என்றும், சம்பவம் தொடர்பில் தீவிர விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## 19.09.2022 நாணய மாற்று வீதம்

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 128 0028 | 14 21 1 |
| கனேடியன் டொலர் | 157 2771 | 17 3742 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 4 212 | 42 2706 |
| யூரோ | 245 7435 | 260 6725 |
| ஜப்பான் யென் | 1 3815 | 1 4853 |
| சிங்கப்பூர் டொலர் | 142 4121 | 153 1182 |
| ஸ்ரேலிங் பவுன் | 3 6 4437 | 312 4711 |
| சுவிஸ் பிரான்ங் | 257 1570 | 274 803 |
| ஐ.அ.டொலர் | 248 064 | 258 8260 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 851 4501 |
| குவைட் | குவைட் தினார் | 0,062 7527 |
| ஓமான் | ஓமான் றியால் | 831 4741 |
| கட்டார் | கட்டார் றியால் | 87 6668 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 85 4716 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 87 6883 |

# நாட்சம்பளத்தை உடனடியாக ஆயிரம் ரூபாவாக உயர்த்துக!

## மஸ்கெலியா பெருந்தோட்டக் கம்பனிக்கு சொந்தமான தேயிலை தோட்டத் தொழிலாளர்கள் கவனயீர்ப்பு போராட்டம்



(க.கிஷாந்தன்)

மஸ்கெலியா பெருந்தோட்டக் கம்பனிக்கு சொந்தமான தேயிலை தோட்டங்களில் பணிபுரியும் தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளத்தை உடனடியாக 1000 ரூபாவாக அதிகரிக்குமாறு கோரி மஸ்கெலியா பிரதேசத்திலுள்ள பல தேயிலை தோட்டங்களில் தோட்டத் தொழிலாளர்கள் நேற்று (19) காலை கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தொழிலாளர் தேசிய சங்கத்தின் ஏற்பாட்டில் மஸ்கெலியா பெருந்தோட்டக் கம்பனிக்கு சொந்தமான மஸ்கெலியா கிளன்டில்ட் தோட்டத்திலும், லக்ஷபான மற்றும் பிரவுன்ஸ்வீக் தோட்டங்களிலும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

போராட்டத்தில் கலந்துகொண்ட தொழிலாளர்கள் எதிர்ப்பு பதாகைகளை ஏந்தியவாறு, கோஷங்களை எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில், ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட தொழிலாளர் தேசிய சங்கத்தின் தேசிய அமைப்பாளர் கணபதி நகுலேஸ்வரன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

நாட்டிலுள்ள ஏனைய பெருந்தோட்டக் கம்பனிகளின் கீழுள்ள அனைத்து தேயிலைத் தோட்டங்களிலும் நாளாந்த சம்பளமாக 1000 முதல் 1200 ரூபா வரை வழங்கப்படுகின்றது.

ஆனால், மஸ்கெலியா பெருந்தோட்டக் கம்பனிக்கு சொந்தமான தேயிலைத் தோட்டங்களில் மட்டும் ஆயிரம் ரூபாவுக்கும் குறைவான சம்பளம் கொடுத்து கம்பனிகள் இலாபம் பெறுகின்றன. அப்பாவி தோட்டத் தொழிலாளர்கள் ஒடுக்கப்படுகின்றனர்.

தோட்டத் தொழிலாளர்கள், தற்போது கடும் பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

மூன்று வேளை உண்பவர்கள் தற்போது ஒரு வேளை மாத்திரமே உண்பதுடன், குழந்தைகளுடன் வறுமையில் வாடுகின்றனர். இந்நிலை தொடர்ந்தால் எதிர்காலத்தில் பட்டினியால் இறக்க நேரிடும் என்று தெரிவித்தார்.

# தோட்டக் கம்பனிகளின் பிரித்தாளும் சூழ்ச்சிக்குள் தொழிலாளர்கள் சிக்கக்கூடாது

## ஜீவன் தொண்டமான் எம்.பி. தெரிவிப்பு







(க.கிஷாந்தன்)

''தோட்டக் கம்பனிகளின் பிரித்தாளும் சூழ்ச்சிக்குள் தொழிலாளர்கள் சிக்கிவிடக்கூடாது. ஒன்றிணைந்து - ஒருமித்த நோக்குடன் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுத்தால் வெற்றி நிச்சயம். தொழிலாளர்களுக்கு பக்கபலமாக நாம் நிற்போம்'' - என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

மஸ்கெலியா பெருந்தோட்டத்தின் கீழ் இயங்கும் தோட்டங்களின் தோட்டத் தொழிலாளர்கள் கடந்த சில நாட்களாக தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டனர். இந்நிலையில், நேற்று முன்தினம் (18) மஸ்கெலியா அம்பாள்ஸ் மண்டபத்தில் குறித்த தோட்டத் தொழிலாளர்களை சந்தித்து உரையாற்றுகையிலேயே ஜீவன் தொண்டமான் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த சந்திப்பில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும், நிதி செயலாளரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ராமேஷ்வரன், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான், முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினர்களான ஏ.பி.சக்திவேல், ஏ.பிலிப்குமார், கணபதி கனகராஜ், கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள், உப தலைவர்கள், மஸ்கெலியா பிரதேச சபை தலைவர் மற்றும் உறுப்பினர்கள் எனப் பல முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டனர்.

ஜீவன் தொண்டமான் மேலும் தெரிவிக்கையில்,

"மஸ்கெலியா பெருந்தோட்ட நிறுவனமானது, தொழிலாளர்களை துன்புறுத்தி வருகின்றது. இந்நிலையில், தமது தொழில்சார் உரிமைகளுக்காக தொழிலாளர்கள் தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்கியுள்ளனர். நாமும் அதற்கு பக்கபலமாக இருக்கின்றோம். எதற்காக தற்போது தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது என நீங்கள் கேட்கலாம். ஆயிரம் ரூபா தொடர்பான வழக்கு விசாரணை நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்தது. அதனால்தான் நாம் நடவடிக்கையில் இறங்கவில்லை. தற்போது நீதிமன்றத்தின் தீர்ப்பு வெளிவந்துள்ளது. தொழிற்சங்கங்களுக்கு வெற்றி கிடைத்துள்ளது. எமது கோரிக்கை நியாயமானது. அதனால்தான் போராடுகின்றோம். நாளை நாம் சம்பள நிர்ணய சபைக்கு சென்றால்கூட எமக்குத்தான் சாதகமாக அமையும்.

தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் தொழிற்சங்கங்களுக்கிடையில் ஒற்றுமை இருக்கவேண்டும். அவ்வாறு ஒற்றுமை இருப்பது எமக்கு பலம். எனினும், அந்த ஒற்றுமை எம்மிடையே முழுமையாக இல்லை. அது எமது பலவீனமாகும். எமது இந்த பலவீனம் நிர்வாகத்துக்கு சாதகமாக அமைந்துவிடுகின்றது. எமது ஒற்றுமையை கண்டு தோட்ட நிர்வாகங்கள் நடுங்கவேண்டும். ஆயிரம் ரூபாவை ஓரணியில் நின்று கேட்க வலியுறுத்தினோம். அச்சத்தால் தொழிலாளர்கள் பிளவுபட்டு நின்றனர். துரைமாரை கண்டு அஞ்ச வேண்டியதில்லை. கட்சி, தொழிற்சங்க பேதங்களும் அவசியமில்லை. தொழில்சார் உரிமைகளுக்காக தொழிலாளர்கள் ஒற்றுமையாக - ஒழுக்கமாக செயற்பட வேண்டும். மக்கள் ஒன்றிணைந்து நாட்டின் ஜனாதிபதியையே மாற்றினர். எனவே, ஒற்றுமையின் வலிமையை புரிந்துகொள்ள வேண்டும்.

மலையகத்துக்கு திடீரென வரும் சில அரசியல்வாதிகள், தொழிற்சங்கங்களை விமர்சிப்பார்கள், ஆனால், கம்பனிகளை விமர்சிப்பதில்லை. அப்படியானவர்கள் கூறும் கருத்தை எம்மவர்களில் சிலர் நம்புவதும் உண்டு. இந்நிலைமையும் மாற வேண்டும்" - என்றார்.

# தொழிலாளர்களின் தொழில்சார் உரிமைகளை வென்றெடுக்க தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து செயற்படவேண்டும்!

## இராதாகிருஷ்ணன் எம்.பி. தெரிவிப்பு





(க.கிஷாந்தன்)

"தோட்டத் தொழிலாளர்களின் தொழில்சார் உரிமைகளை வென்றெடுப்பதற்கு தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து செயற்படவேண்டும்'' என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், தமிழ்த் முற்போக்கு கூட்டணியின் பிரதித் தலைவருமான கலாநிதி வே.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

மஸ்கெலியாவில் நேற்று முன்தினம் (18) நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மஸ்கெலியா பகுதியில் தோட்டக் கம்பனிகளின் கெடுபிடிகள் அதிகரித்துள்ளன. தீபாவளிக்கான முற்கொடுப்பனவை வழங்க முடியாது என பல அறிவிப்புகள் வெளியிடப்படுகின்றன. அப்பகுதியில் தொழிற்சங்க நடவடிக்கை இடம்பெறுகின்றது. எனவே, அனைத்து தொழிற்சங்கங்களும் ஒன்றிணைந்து இதனை எதிர்கொள்ளவேண்டும்.

மாறாக நாம் பிளவுபட்டு நின்றால் அது நிர்வாகத்துக்கே சாதகமாக அமையும். எமது பெருந்தோட்ட மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் ஜெனிவாவில் கூட பேசப்படுகின்றது. இதனை நாம், முன்னேற்றத்துக்கான களமாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும் - என்றார்.

# நாடு சீரழிவதற்கு காரணமாக இருந்த முன்னாள் அமைச்சர்களை மீண்டும் நியமிக்க முன்னுரிமை வழங்கப்படுகின்றது

## வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் குற்றச்சாட்டு

(வவுனியா நிருபர்)

நாடு சீரழிவதற்கு காரணமாக இருந்த முன்னாள் அமைச்சர்களை மீண்டும் அமைச்சர்களாக நியமிக்க முன்னுரிமை வழங்கப்படுகின்றது - என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

வவுனியா, பட்டாணிச்சூரில் நேற்று முன்தினம் (18) இடம்பெற்ற மக்கள் சந்திப்பின்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த மூன்று வருட ஆட்சியில் மிக மோசமாக பொருளாதாரம் நாசப்படுத்தப்பட்டது. குறிப்பாக, எனது வன்னி விஜயத்தின்போது மக்கள் கஷ்டத்துக்கு மத்தியில் வாழ்ந்துகொண்டிருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது.

மேலும், மீனவர்கள் மற்றும் விவசாயிகளுக்கு எண்ணெய் வழங்கப்படாமல் தொழில் பாதிக்கப்பட்டு மிகுந்த கஷ்டத்தின் உச்சத்தில் இருக்கின்றனர். திட்டமிட்ட அடிப்படையில் அவர்களின் செயல்பாடுகள் அமையாததால் சாதாரண குடிமக்களும் வாழ முடியாத நிலைமையை காணக்கூடியதாக இருக்கின்றது.

இதேவேளை, இலங்கை நாட்டை சீரழித்தவர்களுக்கு எதிராகவும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற பிரேரணை ஐ.நாவில் முன் வைக்கப்பட்டுள்ளதுடன், அதற்கு அரசு நடவடிக்கை எடுக்காவிடின், சர்வதேசம் அவ்வாறானவர்களை தண்டிக்கும் என்ற செய்தியையும் சொல்லியிருக்கின்றது. எனவே, இவ்வாறான மோசமான நிலையிலிருந்து நாட்டைக் காப்பாற்றுவதற்காக எதிர்காலத்தில் மக்கள் ஒன்றுபடவேண்டிய தேவை இருக்கின்றது.



அரசியலமைப்பு மாற்றம் தொடர்பாக பேச்சளவிலேயே ஆட்சியாளர்கள் இருக்கின்றார்களே தவிர, நாட்டை பற்றியோ, அரசியலமைப்பை பற்றியோ அல்லது நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவது சம்பந்தமான செயற்பாடு களையோ காணவில்லை.

மேலும், அமைச்சர் பதவிகளை அதிகளவில் வழங்குவதன் ஊடாக அவர்களுக்கு பக்கபலமாக இருக்கின்றவர்களான, இந்த நாடு சீரழிவுக்கு உள்ளானதற்கு காரணகத்தாவாக இருந்த முன்னாள் அமைச்சர்களை மீண்டும் அமைச்சர்களாக நியமிப்பதற்கு முன்னுரிமை வழங்கப்படுகின்றதே தவிர, அரசியலமைப்பு மாற்றம் தொடர்பாக எந்தவொரு நடவடிக்கையும் எடுப்பதாக தெரிய வில்லை.

ஏற்கனவே 13ஆவது திருத்தச்சட்டத்தில் மாகாண சபை ஆட்சிக்காலம் முடிவடைந்து பல வருடங்களாகியும் மாகாண சபைத் தேர்தல் நடைபெறாமல் உள்ளமையால் இத்தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகளை செய்யுமாறு இந்தியா வலியுறுத்தியிருக்கிறது.

மேலும், இலங்கையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலிருந்து வலுவான வேண்டுகோள் இதற்காக எழுப்பப்பட்டுக்கொண்டிருக்கின்றது. எனவே, அதனை அவசரமாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதில் நாங்களும் உறுதியாக இருக்கின்றோம் - என்றார்.

# தாதிய உத்தியோகத்தர்களுக்கான சிறப்புப் பயிற்சிகள்



(கிளிநொச்சி நிருபர்)

மருத்துவ நிர்வாக விசேட வைத்திய நிபுணர்களால் வட மாகாணத்தில் கடமையாற்றும் தாதிய உத்தியோகத்தர்களுக்கான சிறப்புப் பயிற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்கென விசேடமாக கடந்த வாரம் யாழ். வந்த சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் சதாசிவம் சிறீதரனால்

தமிழ்மொழி மூலமான இந்தப் பயிற்சிநெறி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதில் கலந்துகொண்ட தாதிய உத்தியோகத்தர்கள் குறித்த பயிற்சிநெறியானது மிகவும் பயனுள்ளதாக அமைந்ததாக மகிழ்ச்சி தெரிவித்தனர்.

இதன் தொடர்ச்சியாக நேற்று முன்தினம் (18) சனிக்கிழமையும், 17 ஆம் திகதியும் மருத்துவ நிர்வாக விசேட வைத்திய நிபுணர்களான டொக்டர் த.சத்தியமூர்த்தி, டொக்டர் த.வினோதன் மற்றும் டொக்டர் திலிப் லியனகே ஆகியோரால் தாதிய உத்தியோகத்தர்களுக்கான சிறப்பு வகுப்புகள் யாழ். போதனா வைத்தியசாலையில் நடத்தப்பட்டன.

இந்தப் பயிற்சிநெறியை மருத்துவ நிர்வாக பயிலுனரான டொக்டர் த.காண்டீபன் ஒருங்கிணைத்ததுடன், வடக்கின் மூத்த மருத்துவ நிர்வாகிகளுள் ஒருவரான டொக்டர் சிறீ பவானந்தராஜா மேற்பார்வை செய்திருந்தார்.

தொடர்ந்தும் வடக்கின் சுகாதாரத்துறை உத்தியோகத்தர்கள் மற்றும் பணியாளர்களுக்கான சிறப்பு வகுப்புகள் நடத்தப்படவுள்ளதாக தெரியவருகிறது.

# மீனவர்கள் பாதிப்பு தொடர்பில் நீதிமன்றை நாட நடவடிக்கை

(யாழ். நிருபர்)

நீதிக்கும் சமாதானத்திற்குமான கனேடியர்கள் அமைப்பினால் வடக்கு மீனவர்கள் பாதிப்பு தொடர்பில் நேற்று முன்தினம் மாலை 6 மணியிலிருந்து இரவு 9 மணிவரை ஆராயப்பட்டு மீனவர்களையும், கடல் வளங்களையும் அழிக்கின்ற அடிமடி தொழில் போன்ற சட்ட விரோத தொழில்களை கட்டுப்படுத்தும் சட்டங்கள் அரசால் நடைமுறைப்படுத்தப்படாமை தொடர்பில் அதற்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன – என்று நீதிக்கும் சமாதானத்திற்குமான கனேடியர்கள் அமைப்பின் குறித்த செயற்றிட்டத்தின் சட்டத்தரணி நாகானந்தா தெரிவித்தார்.

நேற்று முன்தினம் வடமாகாண கடற்றொழில் அமைப்புகளின் பிரதிநிதிகளை சந்தித்த பின்னர் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே சட்டத்தரணி நாகானந்தா இவ்வாறு தெரிவித்தார்.

குறித்த கலந்துரையாடலில் பொருளியல் ஆய்வாளர், செல்வின் வடமாகாண கடற்றொழிலாளர், இணையத் தலைவர் கா.அண்ணாமலை மற்றும் நிர்வாகிகள், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களின் மீனவர் பிரதிநிதிகள் என சுமார் சுமார் முப்பது பேர் வரை கலந்துகொண்டனர்.

# நவாலியில் இளைஞனை வீதியில் துரத்தி துரத்தி வாளினால் வெட்டிய வன்முறைக் கும்பல்

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் நவாலி பகுதியில் இளைஞன் ஒருவர் மீது சரமாரியாக வாள்வெட்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த ச.துசாளன் (வயது 18) எனும் இளைஞன் மீதே இவ்வாறு வாள்வெட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நவாலி கிழக்குப் பகுதியிலுள்ள நண்பனின் பிறந்த நாளுக்கு நேற்று முன்தினம் (18) இரவு சென்று விட்டு வீடு நோக்கி மோட்டார் சைக்கிளில் அவர் பயணித்துக்கொண்டிருந்த வேளை நவாலி சம்பந்தப்பிள்ளையார் ஆலயத்திற்கு அருகில் இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வந்த 5 பேர் கொண்ட வன்முறைக்குழு இவ்வாறு வாள்வெட்டை மேற்கொண்டுள்ளது.

தாக்குதலுக்கு இலக்கான இளைஞன் வன்முறைக் கும்பலின் தாக்குதலிலிருந்து தப்பிக்கொள்வதற்காக வீதியில் ஓடியபோதிலும், துரத்தி துரத்தி சரமாரியாக வாள்வெட்டினை மேற்கொண்டுவிட்டு வன்முறைக் கும்பல் அவ்விடத்திலிருந்து தப்பிச் சென்றுள்ளது.

தாக்குதலுக்கு இலக்கான இளைஞனை அவ்விடத்தில் நின்றவர்கள் மீட்டு, யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்த்தனர்.

சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட ஒருவர் ஆனைக்கோட்டையில் கைது





(யாழ். நிருபர்)

யாழ். மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவின ருக்குக் கிடைத்த இரகசிய தகவலின்படி யாழ்ப்பாண பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆறுகால் மடம் ஆனைக்கோட்டை பகுதியில் நீண்ட காலமாக கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட 38 வயதுடைய நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதோடு, அவரிடமிருந்து 50 லீற்றர் கோடா, 8 லீற்றர் கசிப்பு மற்றும் 3 வாள்களும் மீட்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து குறித்த நபர் கைதுசெய்யப்பட்டுள்ளதோடு, அவரிடமிருந்து கசிப்பு உற்பத்தி செய்ய பயன்படுத்தப்படும் மூலப்பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன மீட்கப்பட்டுள்ளன

கைது செய்யப்பட்ட நபர் விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளார்.

# ஹெட்ரிக் வெற்றியுடன் தொடரும் இலங்கை லெஜெண்ட்ஸ் அணியின் ஆதிக்கம்




இந்தியாவில் நடைபெற்றுவரும் முன்னாள் கிரிக்கெட் வீரர்கள் பங்கேற்கும் ரோட் சேப்டி வேல்ட் சீரிஸ் கிரிக்கெட் தொடரில் இலங்கை லெஜெண்ட்ஸ் அணி பங்கேற்ற முதல் மூன்று போட்டிகளிலும் வெற்றிபெற்று புள்ளிப்பட்டியலில் முதலிடத்தில் நீடிக்கிறது.

முதல் போட்டியில் அவுஸ்திரேலிய லெஜெண்ட்ஸ் அணியை வீழ்த்திய டில்ஷான் தலைமையிலான இலங்கை லெஜெண்ட்ஸ் அணி, இரண்டாவது போட்டியில் இங்கிலாந்து அணியை வீழ்த்தியது. இந்நிலையில், மூன்றாவது போட்டியில் நேற்று முன்தினம் இன்டோரில் தென்னாபிரிக்க லெஜெண்ட்ஸ் அணியை எதிர்கொண்டது.

முதலில் துடுப்பாடிய இலங்கை லெஜென்ட்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட் இழப்பிற்கு 165 ஓட்டங்களை குவித்தது. துடுப்பாட்டத்தில் ஜீவன் மெண்டிஸ் ஆட்டமிழக்காது 27 பந்துகளில் 43 ஓட்டங்களை அதிகபட்சமாக குவித்தார். 166 என்ற சவாலான வெற்றியிலக்கை நோக்கி பதிலுக்கு ஆடிய தென்னாபிரிக்க லெஜெண்ட்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட் இழப்பிற்கு 154 ஓட்டங்களை மாத்திரம் பெற இலங்கை அணி 11 ஓட்டங்களினால் வெற்றிபெற்றது.

போட்டியின் ஆட்டநாயகனாக சனத் ஜெயசூரிய தெரிவானார். இலங்கை லெஜெண்ட்ஸ் அணி தங்களது நான்காவது ஆட்டத்தில் எதிர்வரும் சனிக்கிழமை நியூசிலாந்து லெஜெண்ட்ஸ் அணியை எதிர்கொள்கிறது.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

# இலங்கை விமானப்படை அணியினருக்கு தளபதியின் பாராட்டுகள்





கடந்த மாதம் இடம்பெற்ற மஞ்சி கரப்பந்தாட்ட போட்டிகளில் சம்பியன் மகுடம் வென்ற இலங்கை விமானப்படை ஆடவர் மற்றும் மகளிர் அணியினர், இந்த ஆண்டு சம்பியனான ஆசியக்கிண்ண மகளிர் கூடைப்பந்து அணியில் இடம்பிடித்த ஸ்கொற்றன் லீடர் சத்துரங்கனி ஜயசூரிய, சிரேஷ்ட வான்படை வீராங்கனை ரஷ்மி பெரேரா, கட்டுடல் ஆணழகன் மிஸ்டர் ஸ்ரீ லங்கா எனும் பட்டம் பெற்ற சிரேஷ்ட வான்படை வீரர் சமிந்த பீரிஸ் மற்றும் தேசிய ரீதியில் இலங்கை விமானப்படையை பிரதிநிதித்துவப்படுத்திய அனைத்து விளையாட்டு வீரர்களையும் கௌரவிக்கும் வகையில் இலங்கை விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் சுதர்சன பத்திரன அண்மையில் வீரர்களை விமானப்படை தலைமைக் காரியாலயத்திற்கு வரவழைத்து விருதுகளை வழங்கியதுடன், வாழ்த்துகளையும் தெரிவித்தார். தேசிய கூடைப்பந்தாட்ட வீராங்கனையான ரஷ்மி பெரேராவுக்கு கோப்ரல் நிலை பதவி உயர்வு இதன்போது வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் விமானப்படைத் தலைமை தளபதி மற்றும் விளையாட்டு வாரிய அங்கத்தவர்கள், அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# மாத்தளை சாஹிரா கல்லூரிக்கு வெற்றி



(கண்டி நிருபர்)

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் நாடளாவிய ரீதியில் ஒழுங்குசெய்துள்ள 17 வயதுக்கு கீழான பாடசாலைகள் கிரிக்கெட் போட்டியின் ஒரு போட்டி அண்மையில் மாத்தளையில் இடம்பெற்றது.

மாத்தளை இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியானது மாத்தளை சாஹிரா கல்லூரி அணிக்கும், ருவன்வெல்ல ராஜசிங்க வித்தியாலய அணிக்கும் இடையில் இடம்பெற்றது. இப்போட்டியில் மாத்தளை சாஹிரா கல்லூரி 13 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய மாத்தளை சாஹிரா கல்லூரி அணி சகல விக்கெட்டுகளையும் இழந்து 158 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு ஆடிய ருவன்வெல்ல ராஜசிங்க வித்தியாலய அணி சகல விக்கெட்டுகளையும் இழந்து 145 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

# மாஞ்சோலை அஸ்-ஸபா கழக சீருடை அறிமுகப் போட்டியில் கல்குடா யங் ஸ்டார் வெற்றி

(எச்.எம்.எம். பர்ஸான்)

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பதுரியா - மாஞ்சோலை அஸ்-ஸபா விளையாட்டுக் கழக கிரிக்கெட் அணியின் சீருடை அறிமுக நிகழ்வும், கிரிக்கெட் போட்டியும் அண்மையில் மாஞ்சோலை அல்-ஹிரா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றது.

இதில், அஸ்-ஸபா அணியுடன் கல்குடா யங் ஸ்டார் அணி மோதிக்கொண்டது. முதலில் துடுப்பெடுத்தாடிய கல்குடா யங் ஸ்டார் அணியினர் 15 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகளை இழந்து 171 ஓட்டங்களை பெற்றுக்கொண்டனர். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அஸ்-ஸபா அணியினர் 15 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகளை இழந்து 113 ஓட்டங்களை மாத்திரமே பெற்று தோல்வியடைந்தனர். யங் ஸ்டார் அணி வீரர் முபாரிஸ் ஆட்டநாயகனாக தெரிவுசெய்யப்பட்டார்.



இந்நிகழ்வில், அதிதிகளாக கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச சபை தவிசாளர் ஏ.எம்.நௌபர், முஸ்லிம் பண்பாட்டலுவல்கள் திணைக்கள கிழக்கு மாகாண பொறுப்பதிகாரி ஏ.எல்.ஜுனைட் நளீமி, மாஞ்சோலை கிராமசேவை உத்தியோகத்தர் ஏ.ஜீ.எம். பஸ்லி, அல்-ஹிரா வித்தியாலய அதிபர் எம்.சீ. ஜிப்ரி கரீம், பதுரியா அல்-மினா வித்தியாலய அதிபர் எம்.ஐ.உபைத்துல்லாஹ், வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பொலிஸ் அதிகாரி இ.எல்.பதுர்தீன், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் பீ.எம்.நூர்தீன் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

# நீர்வேளாண்மைசார் உற்பத்திகளை விஸ்தரிக்க ஊக்குவிப்புத் தொகை

## அமைச்சர் டக்ளஸினால் வழங்கிவைப்பு





பிரதேச மக்களுக்கும் நாட்டுக்கும் நீர்வேளாண்மைசார் உற்பத்திகளுக்கு ஊடாக பலமான வாழ்வாதார கட்டமைப்பை உருவாக்கும் முயற்சியின் ஓர் அங்கமாக மன்னாருக்கான விஜயம் அமைந்துள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்திற்கான இரண்டு நாள் விஜயத்தை மேற்கொண்டுள்ள கடற்றொழில் அமைச்சர், முதலாவது நாள் விஜயம் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்

அதனடிப்படையில், மன்னார், முசலி பிரதேசத்தில் தெரிவு'செய்யப்பட்ட பயனாளர்களுக்கு கடல்பாசி மற்றும் கொடுவா மீன் உற்பத்தியை மேற்கொள்வதற்கான இரண்டாம் கட்ட ஊக்குவிப்புத் தொகை வழங்கும் நிகழ்வு கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் முசலி பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் (18) நடைபெற்றது.

ஏற்கனவே முசலி பிரதேசத்தைச் சேர்ந்த 27 பயனாளர்களுக்கு கடல்பாசி செய்கைக்காகவும், 6 பேருக்கு கொடுவா மீன் வளர்ப்பதற்குமான முதற்கட்ட ஊக்குவிப்புத் தொகை கடந்த வருடம் இறுதியில் வழங்கப்பட்ட நிலையில், இரண்டாம் கட்ட ஊக்குவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

நீர்வேளாண்மை சார்ந்த பாசி, கொடுவா மீன் வளர்ப்பு, கடலட்டை மற்றும் பண்ணை முறையிலான கடலுணவு வளர்ப்பு போன்றவற்றை விருத்திசெய்வதன் மூலம், கடற்றொழிலை ஜீவனோபாயமாகக்கொண்ட மக்களுக்கு மேலதிக வாழ்வாதாரத்தை ஏற்படுத்தும் நோக்கில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் திட்டத்திற்கமைய, நாடளாவிய ரீதியில் இந்த ஊக்குவிப்புத் தொகை வழங்கப் பட்டுள்ளது.

அதனடிப்படையில், பாசி வளர்ப்பை மேற்கொள்கின்றவர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாவும், கொடுவா மீன் வளர்ப்பிற்காக தலா 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, கொக்குப்படையான் கடற்றொழில் இறங்குதுறையில் காணப்படும் தொழில்சார் பிரச்சினைகள் மற்றும் எதிர்பார்ப்புகள் தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தது.

இதனையடுத்து, குறித்த இறங்குதுறைக்கு கண்காணிப்பு விஜயத்தை மேற்கொண்ட கடற்றொழில் அமைச்சரிடம், அங்கு கூடியிருந்த கடற்றொழிலாளர்கள், கடலரிப்பை தடுப்பதற்கான கல்லணை ஒன்றினை அமைத்துத் தருமாறும், கடலோர பாதுகாப்புத் திணைக்களத்தின் ஊடாக வாடி அமைப்பதற்கான காணியை ஒதுக்குதல் உட்பட்ட பல்வேறு கோரிக்கைளை முன்வைத்தனர்.

இவற்றுள் உடனடியாக தீர்வு காணக்கூடிய விடயங்கள் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடி தேவையான நடவடிக்கைகளையும் மேற்கொண்டார்.

அதேபோன்று, எருக்கலம்பிட்டி மற்றும் கொன்னையன் குடியிருப்பு போன்ற இடங்களில் தனியார் முதலீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற இறால் பண்ணைகளையும் பார்வையிட்ட கடற்றொழில் அமைச்சர் தனியார் முதலீடுகள் ஊடாக நீர்வேளாண்மைசார் உற்பத்திகளை விஸ்தரிப்பது தொடர்பாகவும் கலந்துரையாடினார்.

# அப்சரா அறக்கட்டளை - ஜிநெக்ஸ்ட் யூத் கிளப் இணைந்து நடத்திய இலவச ஆயுர்வேத முகாம்







ஆயுர்வேத மருத்துவ முகாம் அண்மையில் மாளிகாவத்தை, கெத்தாராமவில் இடம்பெற்றது. மருத்துவ முகாமில் விசேட வைத்தியர்களின் இலவச ஆலோசனை மற்றும் பரிசோதனைகள் மற்றும் அனைவருக்கும் இலவச மருந்துகளும் வழங்கப்பட்டன. முகாமில் ஏராளமான பொதுமக்கள் ஆலோசனை பெற்றனர்.

20 சிறப்பு மருத்துவர்கள்கொண்ட குழு முகாமில் பல்வேறு உடல்நலப் பிரச்சினைகள் குறித்து மக்களுக்கு ஆலோசனை வழங்கவும், அவர்கள் ஆரோக்கியமான மற்றும் மகிழ்ச்சியான வாழ்க்கையை நடத்தவும் முகாமில் பணியாற்றியது. இந்த கடினமான வாழ்க்கை மற்றும் சூழ்நிலையில் தேவைப்படும் மக்களுக்கு இந்த சிறந்த முயற்சி உதவியது. இந்தத் திட்டத்தின் சிறப்பம்சங்கள் ஆரோக்கியம் மற்றும் ஆரோக்கியத்தைப் பெற எண்ணெய் சிகிச்சைகள் வழங்கப்பட்டன. இது பல நோயாளிகள் தங்கள் உடல்நலப் பிரச்சனைகளைப் பற்றி அறிந்துகொள்ள உதவியது. அவர்கள் இலவச மருந்துகளையும் பெற்றனர். மக்கள் முழுமையான நல்வாழ்வுக்காக ஆயுர்வேதத்தை எவ்வாறு தங்கள் வாழ்வில் ஏற்றுக்கொண்டார்கள் என்பதை இது காட்டுகிறது.

ஆயுர்வேத சிகிச்சைகள் இந்த டிரெண்டிங் உலகில் ஆரோக்கியமான வாழ்க்கை முறைக்கான சரியான ஆரோக்கிய அறிவின் அமைப்பாகும். அப்சரா அறக்கட்டளையின் நிறுவுனர் அப்சரா அமரசிங்க தலைமையில், GeNext Club தலைவர் அப்துல் ரஹ்மான் அஸீமின் ஒருங்கிணைப்புடன் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதற்கு மக்கள் அளித்த பதில் பாராட்டுக்குரியது. அனைத்து சிகிச்சைகளும் ஆலோசனைகளும் பாதுகாப்பான மற்றும் பாதுகாப்பான சூழலில் செய்யப்பட்டன.







கொழும்பு, புளூமெண்டல் வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ மஹா காளியம்மன் ஆலயத்தின் கும்பாபிஷேகம் அண்மையில் நடைபெற்றது. இதன்போது ஆலய நிர்வாகிகள் மற்றும் பெருந்திரளான பக்தர்களும் கலந்துகொண்டிருந்தனர். (படங்கள் - ஏ.எஸ்.எம்.ஜாவித்)


திகதி 18.09.2022 ஞாயிற்றுக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4882
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 7,632,870.00
ஆங்கில எழுத்து X வெற்றி இலக்கங்கள் 5 5 9 7 6 4
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 12,029,582.00

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3124
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,650,560.00
ஆங்கில எழுத்து C வெற்றி இலக்கங்கள் 48 65 66 78
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 76,768,010.00

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1337
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,503,780.00
வெற்றி இலக்கினம் மகரம் வெற்றி இலக்கங்கள் 5 3 2 0 9 9
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,809,497.20

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 912
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,663,720.00
வெற்றி இலக்கினம் E வெற்றி இலக்கங்கள் 09 36 76 77
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 126,085,499.60

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 191
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,660,820.00
இலக்கினம் கன்னி வெற்றி இலக்கங்கள் 03 28 35 41
விசேட இலக்கினம் கன்னி
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 4,825,101.20

கோடி 27 + Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1230
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,557,800.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 271,129,790.00
L 20 30 31 52 73
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.I. முதலிகே மாவத, கொழும்பு 01

# மழலைகளின் மனக் குமுறல்களை கவிதைகளாகத் தரும் 'மனிதம் இல்லா பூமி'



## ஆசிரியர் அஸ்மியா நிஸாம் 'தமிழன்' நாளிதழுக்கு செவ்வி

நேர்காணல் - இக்பால் அலி

**கொரோனா தொற்றையடுத்து இன்றைய பொருளாதார நெருக்கடியான சூழலில் அச்சு ஊடகங்கள் சவால்களை வெற்றிகொண்டு, தமிழ்க் கலை இலக்கியத்துறை சார்ந்த விடயங்களை வெளிக்கொண்டுவரும் நிலையில், ஈழத்துத் தமிழ் இலக்கியப் பரப்பில் நூல்கள் வெளிவந்து கொண்டிருப்பதும், அதற்கான வெளியீட்டு விழாக்களும், இலக்கிய நிகழ்வுகளும் மிகச் சிறப்பாக நடைபெற்று வருவதையும் நாம் அனைவரும் ஒப்புக்கொண்டே ஆகவேண்டும். அந்த வகையில் அக்குறணையில் அஸ்மியா நிஸாம் எழுதிய 'மனிதம் இல்லா பூமி' என்ற கவிதைத் தொகுதி வெளியீட்டு விழா வெகு விமரிசையாக இடம்பெற்றது. இவர் நாவலப்பிட்டி பிரதேசத்தை பிறப்பிடமாக் கொண்டவர். அவ்வூரில் சிறிய வயதில் இலக்கியத்தில் தடம் பதித்தவர். அந்நூலாசிரியர் அஸ்மியா நிஸாம் 'தமிழன்' நாளிதழுக்கு வழங்கிய செவ்வி.**

**உங்களுடைய ஆரம்பக் கல்வி வாழ்க்கை பற்றிக் கூறுவீர்களா?**

நாவலப்பிட்டி புனித சென் மேரிஸ் கல்லூரியில ஆரம்பம் முதல் 10 ஆம் ஆண்டு வரையிலும் கற்றேன். 1994 முதல் 1999 ஆம் ஆண்டு வரை இடைநிலைக் கல்வி, க.பொ.த. சாதாரண தரம் மற்றும் உயர்தரம் வரையிலும் ஹபுகஸ்தலாவ அல் மின்ஹாஜ் மகா வித்தியாலயத்தில் கற்றேன்.

க.பொ.த. சாதாரணப் பரீட்சையில் 5 ஏ 5 பி சித்திகளை பெற்று க.பொ.த. உயர்தரம் கற்பதற்கான தகுதியைப் பெற்றேன். பின்பு க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் 3 ஏ சித்தியடைந்து சட்டக் கல்லூரிக்கு தெரிவுசெய்யப்பட்டேன். பேராதனைப் பல்கலைக்கழக அனுமதி கிடைத்தது. எனினும், குடும்ப பொருளாதார நெருக்கடி காரணமாக பல்கலைக்கழகம் செல்லவில்லை.

எனக்குப் பின்பு தங்கைமார் இருந்தார்கள். அவர்களுடைய திருமண வாழ்க்கை குறித்து பெற்றோர்கள் அச்சப்பட்டதால் அவர்கள் தூரநோக்குடன் சிந்திக்காமல் என்னைத் திருமணம் செய்து கொடுக்க முன்வந்தார்கள். திருமண பந்தத்தில் இணைந்து கொண்டேன். ஆனால், என் கணவர் அப்போதே கல்வியை தொடரப் போகின்றீர்களா என்று என்னிடம் வினவினார். அத்துடன் கல்வியைத் தொடர்வதற்கு பூரண அனுமதியைத் தருகிறேன் என்றார். ஆனால், குடும்பத்தவர்கள் எவரும் அதனை விரும்பவில்லை. திருமணத்திற்குப் பின்பு கல்வியைத் தொடரத் தேவையில்லை. திருமண வாழ்க்கையிலேயே இருங்கள் என்று கூறிவிட்டார்கள். உண்மையிலேயே இரு படகுகளில் கால் வைக்க முடியாது என யோசித்து குடும்ப வாழ்க்கைக்கே முக்கியத்துவம் கொடுத்து எனது வாழ்க்கையின் கால்களை பதிக்க ஆரம்பித்தேன்.

**உங்களுடைய இலக்கிய ஆரம்பம் குறித்து கூறுவீர்களா?**

ஆம். உண்மையிலேயே எனது இலக்கியப் பயணம் ஆறாம் ஆண்டு முதல் ஆரம்பிக்கப்பட்டது. எங்கள் பாடசாலையில் ரஹ்மான் என்னும் விஞ்ஞான ஆசிரியர் இருந்தார். அவர் விஞ்ஞான ஆசிரியராக இருப்பினும் நிறைய புத்தகங்கள் வாசிப்பார். அவர் கையில் நிறையப் புத்தகங்கள் இருக்கும். அவரிடம் முதன் முதலாக நான் கண்ணால் கண்ட புத்தகம் யாதெனில் மறைந்த மர்ஹூம் அமைச்சர் எம்.எச்.எம்.அஷ்ரஃப் எழுதிய "நான் என்னும் நீ 10" என்னும் கவிதைத் தொகுதி நூல் ஆகும்.

அந்நூலை வாங்கிப் படித்த ஞாபகம் இன்னும் நினைவில் இருக்கிறது. காதல் கவிதைகள் வாசிப்பதென்றால் அதிகம் ஆர்வம். அந்த நூலில் ஒரு காதல் கவிதை காணப்பட்டது. "உன் நகத்தின் தாக்கத்தால் உணர்வு பெற்ற என்னியத்தின் அந்த இன்பம் இன்னும் இருக்கிறது" என்பதாகும். அந்த கவிதையை வாசித்த பின்பு எனக்கு கவிதையின் மீது ஒரு ஈர்ப்பு வந்தது.

அந்த வகையில் நான் எழுதிய முதலாவது கவிதையும் காதல் கவிதைதான். "கண்கள் மட்டும் நோக்கி விட வார்த்தைகள் பரிமாறாமல்" என்று தொடங்கி பல கவிதைகள் எழுதினேன். ஒன்பதாம் ஆண்டு வரையிலும் மூன்று வருடங்கள் காதல் கவிதைகள் எழுதினேன். அதேபோன்று தான் ஒன்பதாம் ஆண்டிலும் நான் கரும்பலகையில் வாசகம் ஒன்றை எழுதி வைத்தேன். "முட்டாள் இரண்டு வழிகளில் முன்னேறலாம். ஒன்று அரசியல், மற்றையது சினிமா" என்று எழுதியிருந்தேன். இதை வகுப்பாசிரியர் பார்த்துவிட்டு இந்த வாசகத்தை யார் எழுதினார் என்று கேட்டார். அவர் பக்கத்து வகுப்பு ஆசிரியரை அழைத்து வந்து என்னைப் பாராட்டினார். அன்று முதல் எனக்கு புத்தகங்கள் கொண்டு வந்து தந்தார். சாண்டில்யனின் கதைப் புத்தகங்கள் எனக்கு பிரயோசமானதாக இருந்தன. அன்று முதல்தான் என்னுடைய இலக்கியப் பயணம் ஆரம்மாயிற்று. அக்காலகட்டத்தில் இலங்கையில் வெளிவரும் தேசிய பத்திரிகைகளுக்கும் ஆக்கங்கள் அனுப்புவேன். நிறைய ஆக்கங்கள் பிரசுமாகியுள்ளன.



சாண்டில்யனின் பொன்விலங்கு, மணிவண்ணின் குறிஞ்சி மலர் ஆகியவற்றை ஒரே நாளில் வாசித்து முடித்து விட்டு மறுநாள் ஆசிரியரிடம் ஒப்படைப்பேன். அதன் பின்னர்தான் நான் யோசித்தேன். கதைக்கும் இந்நூலின் தலைப்பின் பொருத்தப்பாடுகள் பற்றியே. ஏன் இந்தக் கதைக்கு குறிஞ்சி மலர் என்று பெயர் வைத்தார்கள்? ஏன் பொன் விலங்கு என்று பெயர் வைத்தார்கள்? அன்று தொடங்கிய இந்தப் பயணத்தால் இன்று வரையிலும் வாசிப்பதிலும், எழுதுவதிலும் அதிகம் ஈடுபாடு காட்டி வருகின்றேன். சகுனி என்ற படத்தைப் பார்த்தேன். இந்தப் படத்திற்கும், இந்தப் பெயருக்கும் என்ன பொருத்தப்பாடு இருக்கிறது என ஆராய்வேன்.

**எழுத்துத்துறைக்கு திருமணம் தடையாக அமையவில்லையா?**

என் கணவர் என்னுடைய எழுத்துத்துறைக்கு எந்தவிதமான தடையும் விதிக்கவில்லை. நான் திருமணம் முடித்து 16 வருடங்கள் ஆகின்றன. திருமணம் முடிக்கும்போது 19 வயது. என்னுடைய கணவர் இலக்கிய முயற்சிகளுக்கு 100 விகிதம் ஒத்துழைக்காமல் இருந்திருந்தால் ஒரு புதிய நூலொன்றை என்னால் வெளிக்கொணர்ந்திருக்க முடியாது.

திருமண பந்தத்தில் இணைந்து கொண்ட பிற்பட்ட காலகட்டத்தில் இலக்கியத்திற்கு தடைகள் ஏற்பட்டன. ஆனாலும், அந்த நேரம் கூட என்னுடைய இலக்கிய ஆர்வம் எந்தளவு இருந்தது என்றால் என்னுடைய குழந்தை பிறந்த சமயத்தில் எல்லோரும் ஆராரோ ஆரிராரோ என்று தாலாட்டுப் பாடல்கள் பாடுவார்கள். நான் ஒரு வித்தியாசமான தாலாட்டுப் பாடலை இயற்றி என் குழந்தைகளுக்காகப் பாடி வந்தேன். என்னுடைய முதல் குழந்தையின் பெயர் ஜனா. என்னுடைய தாலாட்டுப் பாடல்கள் உள்ளூர் சுற்று வட்டாரத்தில் பிரபல்யமாகப் பேசப்பட்டன. "அல்லாஹ் அல்லாஹ் யா அல்லாஹ் ஜனாவுக்கு அறிவை கொடு நல்லா. பெற்றோர் சொல்லைக் கேட்டிட வேண்டும். பெரியோர் போற்றிட வாழ்ந்திட வேண்டும். நற்குணத்தில் இவள் உயர்ந்திடணும்..." என அப்பாடல் அமைந்தது.

**'மனிதம் இல்லா பூமி' கவிதை நூலை வெளிக் கொணர்வதற்கான ஆர்வம் உங்களுக்கு எவ்வாறு ஏற்பட்டது?**

அந்நூலில் இடம்பெற்றுள்ள கவிதைகள் யாவும் மூன்று, நான்கு மாதங்களில் எழுதிய கவிதைகளாகும். எந்த சஞ்சிகைகளிலும், பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்படவில்லை. வாசகர் மத்தியில் ஜனரஞ்சகப்படுத்தப்படவில்லை. எனினும், ஒரு தொகுதியாக வெளிக் கொணர்ந்துள்ளேன். இதில் 50 கவிதைகள் உள்ளன. நூறு பக்கங்களைக் கொண்டது.

ஒவ்வொரு கவிதையிலும் ஒவ்வொரு சமூகப் பிரச்சினையை சொல்லக் கூடிய செய்திகளையே எழுதியுள்ளேன். கைத்தொலைபேசியில் பெண்கள் அதிகளவு மூழ்கிப்போய் உள்ளார்கள். பொதுவாக இளம் தாய்மார் கைத்தொலைபேசியோடு தான் காலத்தைக் கடத்துகிறார்கள். குழந்தைகளைக் கவனிப்பதை விட கைத்தொலைபேசியையே கவனிக்கிறார்கள். குழந்தைகளைக் கவனிப்பதை விட கைத்தொலைபேசியை சார்ஜ் பண்ணுவதற்கு கவனம் செலுத்துகிறார்கள். மழலையின் மனக்குமுறல்கள் எப்படி இருக்கின்றன என ஒவ்வொரு கவிதையிலும் இந்த அவலநிலையை சுட்டிக்காட்டி எழுதியுள்ளேன்.

**வெற்றிகரமான முறையில் நடந்தேறிய உங்கள் நூல் வெளியீட்டு விழா பற்றிக் கூறுவீர்களா?**

இந்தக் கவிதைத் தொகுதியை சூம் வழியாக வெளியிட யோசித்து வாழ்த்துரை வேண்டி பிரான்ஸில் உள்ள அமீனை தொடர்புகொண்டேன். அவர் இந்தியாவைச் சேர்ந்தவர். கவிஞர்களுக்கெல்லாம் தலைமை தாங்கக் கூடியவர். அவர் எனக்கு குறுந்தகவல் ஒன்றை அனுப்பியிருந்தார். அதாவது இந்த கவிதைகளை நூல் வடிவில் கொண்டுவராமல் ஏன் சூமில் வெளியிடப் போகின்றீர்கள் என்று கேட்டு எழுதி இருந்தார். அதற்கு பொருளாதார வசதியில்லை என்று கூறியதற்குப் பின்னர் அதனை வெளியிடுவதற்கான பண உதவியைத் தருகிறேன் என்று கூறினார். அந்த வகையில் தான் இந்த நூல் அச்சில் வெளிவந்தது. அக்குறணையைப் பொறுத்தவரையில் எனக்கு இலக்கியவாதிகள் எவரையும் தெரியாது. ஐ.டி.எஸ். நிறுவனத்தின் பைசல் இதற்கு ஒத்துழைப்பு வழங்குவதாக கூறினார்.

அவர் இந்த நூல் வெளியீட்டு விழாவுக்கு உதவி செய்கிறோம். ஆனால், இதற்கு யார் யாரை அழைப்பது என்பது தெரியாது என்று கூறி அவர் இவ்வெளியீட்டு விழாவுக்கு ஒத்துழைப்பு வழங்க முன்வந்தார். ஆனாலும், இந்த நூல் வெளியீட்டு விழாவுக்கு வருகை தந்தவர்கள் யாவரும் எனக்காக வருகை தந்த சனக் கூட்டம் எனலாம்.

# ஹொரணை தமிழ்ப் பாடசாலையில் கலைமகளுக்கு சிலை









ஹொரணை நகரில் அமைந்திருக்கும் தமிழ் மகா வித்தியாலயத்தில் கலைமகளுக்கு சிலை ஸ்தாபிக்கும் வைபவம் நடைபெற்றது.

களுத்துறை மாவட்ட சமூக செயற்பாட்டாளர் திருமதி தனலட்சுமி மாதவனின் பூரண அனுசரணையில் நடைபெற்ற இந்நிகழ்வில், களுத்துறை மாவட்ட இந்து அறநெறி ஒன்றியத்தின் ஸ்தாபக ஆலோசகர் சிவஸ்ரீ சிவசுதர்ஷன் குருக்களினால், பாடசாலையில் அமையப் பெற்றிருக்கும் விநாயகர் ஆலயத்தில் சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டு கலைமகள் சிலை ஸ்தாபிக்கப்பட்டது.

நிகழ்வின் இறுதியில் சமூக செயற்பாட்டாளர்களான திருமதி தனலட்சுமி மாதவன் மற்றும் திருமதி பத்மினி ஆகியோருக்கு பாடசாலை நிர்வாகத்தினரால் நினைவுச்சின்னம் வழங்கப்பட்டு கௌரவம் அளிக்கப்பட்டதுடன், பாடசாலை மாணவர்களுக்கு புத்தகப்பைகளும் வழங்கப்பட்டன.








இந்நிகழ்வில், ஹொரணை தமிழ் வித்தியாலயத்தின் அதிபர் டீ.சி.ஜீவயோகினி மற்றும் ஹொரணை வலய ஆசிரிய, ஆலோசகர், எஸ்.வி.நமசிவாயம், ஆசிரியர் ஞானசேகரன், சமூக தன்னார்வலர் தேஷான் லக்ஷித்த சில்வா, பாடசாலை அபிவிருத்தி சங்கப் பிரதி செயலாளர் எஸ்.பிரகாஸ், பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட பெருந்திரளானோர் கலந்துகொண்டிருந்தார்கள்.





## போடியார் புலம்பல்!



**அரசாங்கத்தின் அடக்குமுறைக்கு இரண்டு வருடங்களுக்குள் தீர்வு வருமாம் எண்டு சரத் பொன்சேகா எம்.பி. சொல்லியிருக்காரு எலுவா?**

**அப்ப இன்னும் இரண்டு வருசமும் நரில், ராஜபக்ஷ கும்பல் ஆட்சி தொடரத்தான் போகுது எண்டத சொல்லாம சொல்லி இருக்காரு.. சரிடாம்பி நீ இராணுவ தளபதியாக இருக்ககுள தமிழர படுத்தின பாட்ட விடயா.**

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு கோரிய செயல்முனைவின் 50ஆம் நாள் திருமலையில்







(அப்துல்சலாம் யாசீம்)

வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஒழுங்குபடுத்தலுடன் கடந்த ஆவணி முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மக்களுக்கான கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும் எனும் 100 நாட்கள் செயல்முனைவின் 50ஆவது நாள் நேற்று (19) திருகோணமலை கடற்கரை முன்றலில் இடம்பெற்றது.

வடக்கு, கிழக்கு மக்களுக்கான அரசியல் தீர்வுகளை கோரிய பதாகைகள் மற்றும் கோஷங்களை உள்ளடக்கிய வகையிலான ஐம்பது பாரியளவான பட்டங்கள் ஏற்றி வெளிப்படுத்தும் வகையில் இந்நிகழ்வு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன், வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு 100 நாட்கள் செயல்முனைவு தொடர்பில் அறிக்கை ஒன்றினையும் வெளியிட்டுள்ளது.

அறிக்கையில், நாங்கள் நாட்டைக் கொண்டாடுவோம். தனியரசோ கேட்கவில்லை இலங்கை நாட்டுக்குள் கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வையே கேட்கின்றோம். வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு அதிகாரப் பரவலாக்கம் என்பது ஒரு ஜனநாயக உரிமையாகும்.

13ஆவது திருத்தச் சட்டமானது அரசியலமைப்பு ரீதியாக அதிகாரப்பரவலாக்கத் திற்கான உரிமையை உறுதிப்படுத்துகின்றது.

இலங்கையில் வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் பேசும் மக்களாகிய நாம் ஆட்சிக்கு வந்த சிங்கள பெரும்பான்மை அரசுகளின் இனவாதக் கொள்கைகளால் பல்வேறு வழிகளிலும் அடக்கப்பட்டு வந்துள்ளோம். இது இன்றுவரை தொடர்கின்றது. இதுவே தமிழ் பேசும் மக்கள் தமக்கான அரசியல் தீர்வு மற்றும் அதிகார பரவலாக்கும் குறித்து சிந்திக்கவேண்டிய விடயமாக வளர்ச்சியடைந்தது.

இதன் குறித்த விடயத்தின் நியாயத்தன்மையை அண்டை நட்புநாடான இந்தியாவும் சர்வதேச நாடுகளும் ஏற்கனவே ஏற்றுக்கொண்டுள்ளன.

இவற்றின் விளைவுகளாகவே இலங்கையில் வடக்கு, கிழக்கு தமிழ் பேசும் மக்களின் அதிகாரப்பரவலாக்கம் சார்ந்து இலங்கை அரசுடன் இந்தியா செய்துகொண்ட 1987இல் இலங்கை - இந்தியா ஒப்பந்தம் மற்றும் 1999 தொடக்கம் 2008 வரையான காலப்பகுதியில் நோர்வே நாட்டின் மத்தியத்துவம் மற்றும் 2022 ஆம் ஆண்டில் சமாதானம், உணர்வால் மற்றும் மேற்கட்டு மனம் சார்ந்த பங்களிப்பை செய்வதற்கு ஜப்பான் நாட்டின் அமைச்சரவை எஸ்சி அக்காசியை இலங்கைக்காக நியமித்தமை இங்கு சுட்டிக்காட்டப்படவேண்டிய விடயமாகும்.

1987 இன் பின்னர் இலங்கையில் ஆட்சிக்கு வந்த அரசுகள் எதுவுமே அதிகாரப்பரவலாக்கத்தை நிராகரிக்கவில்லை. விரும்பியோ விரும்பாமலோ அவர்கள் அதிகார பரவலாக்கம் சார்ந்த உரையாடலை மேற்கொள்ள வேண்டிய நிலையே காணப்பட்டது.

1987இல் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தன இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் மூலமாக அதிகாரப் பரவலாக்கத் திற்கான 13ஆவது திருத்தச் சட்டத்தை அரசியலமைப்பில் கொண்டுவந்தார்.

அதைத் தொடர்ந்து 1990ஆம் ஆண்டுகளில் அப்போதைய ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச அரசியல் தீர்வுக்கான திட்டங்களை முன்வைத்தார். அவரின் காலத்தில் அதாவது 1991களில் மங்கள முனசிங்க தலைமையில் 45 பேர் கொண்ட நாடாளுமன்ற தெரிவுக்குழு அமைக்கப்பட்டு, அங்கு தீர்வுத் திட்டங்கள் முன்வைக்கப்பட்டிருந்தது எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்போது தம்பலகாமம், மூதூர், குச்சவெளி, கிண்ணியா போன்ற பகுதிகளைச் சேர்ந்தவர்கள் தமக்கான உரிமைகளை வழங்குமாறு கோரிக்கை விடுத்ததுடன், சிறந்த தீர்வை அரசாங்கம் வழங்கவேண்டும் எனவும் இதன்போது கேட்டுக்கொண்டனர்.

# மருதமுனை ஜெஸீமா முஜீப் எழுதிய 'குறுக்கு வேலி' கவிதை நூல் வெளியீடு





(மருதமுனை நிருபர்)

மருதமுனை அலிஸ் கலை, இலக்கிய ஆய்வு மற்றும் ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் மருதமுனை ஜெஸீமா முஜீப் எழுதிய 'குறுக்கு வேலி' கவிதை நூல் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் (18) மருதமுனை கலாசார மத்திய நிலைய மண்டபத்தில் இராணுவ உத்தியோகத்தர் மர்ஹூம் ஆதம்பாவா சலீம் நினைவரங்கில் நடைபெற்றது.

இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கத்தின் தேசியத் தலைவர் ஆசிரியர் ஜெஸ்மி எம்.மூஸா தலைமையில் இந்த நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது. பிரதம அதிதியாக அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்ற மாவட்ட நீதிபதி எம்.எச்.எம்.ஹம்ஸா கலந்துகொண்டு வர்த்தகர் எம்.ஐ.அப்துல் பரீட்டுக்கு நூலின் முதற்பிரதியை வழங்கி நூல் வெளியீட்டை ஆரம்பித்துவைத்தார்.

கௌரவ அதிதிகளாக கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி, கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் ஏ.எச்.எம்.அன்சார், பெரியநீலாவணை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆர்.ஜி.ரீ.ஜெயலால் ஆகியோருடன் எழுத்தாளர்கள், கவிஞர்கள், உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

கல்முனை பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தி உத்தயோகத்தர் ஏ.பி.எம்.நவாஸ் வரவேற்புரை நிகழ்த்தினார். 'குறுக்கு வேலி' கவிதை நூல் பற்றி தென்கிழக்குப் பல்கலைக்கழகப் பேராசிரியர் எஸ்.எம்.ஐயூப், கல்முனை கல்வி வலய உதவிக் கல்விக் பணிப்பாளர் கலாநிதி சத்தார் எம்.பிர்தௌஸ் ஆகியோர் உரையாற்றினார்கள்.

இலக்கிய அதிதிகளாக கவிஞரும் எழுத்தாளருமான எம்.எம்.நௌபல், பாவேந்தல் பாலமுனை பாறூக் ஆகியோர் கலந்துகொண்டனர். நிகழ்ச்சித் தொகுப்பையும், ஊடக அனுசரணையையும், ஊடகவியலாளர்களான ஏ.எல்.எம்.சினாஸ், றாஸிக் நபாயிஸ் ஆகியோர் வழங்கினார்கள்.

# அம்பாறை மாவட்டத்தில் கடல் மீன்களின் விலை அதிகரிப்பு





(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டத்தில் அதிகளவான மீன்களின் பிடிபாடு அதிகரித்தபோதிலும் மீன்களின் விலை அதிகரித்து காணப்படுகின்றது. குறித்த மாவட்டத்தில் காரைதீவு பிரதேச சபை, நிந்தவூர் பிரதேச சபை, கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கடலில் ஏற்பட்ட திடீர் மாற்றம் காரணமாக அதிகளவு மீன்கள் பிடிக்கப்பட்டதையடுத்து விலைகள் அதிகரித்துள்ளன.


நாட்டில் பொருளாதார நெருக்கடி தற்போது தொடர்வதன் காரணமாக மீனவர்கள் தமது வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காக இவ்வாறு விலை அதிகரிப்பை மேற்கொண்டுள்ளதாக பொதுமக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இதனால் சூரை ஒரு கிலோ 1,800 ரூபா முதல் 2,550 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டதுடன், முரல் ஒரு கிலோ 800 ரூபா முதல் 1,200 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டுள்ளது. அத்தோடு ஒரு கிலோ விளைமீன் 1,000 ரூபாவாகவும் பாரை மீன் ஒரு கிலோ 2,500 ரூபாவாகவும் இறால் ஒரு கிலோ 1,700 ரூபாவாகவும் கணவாய் ஒரு கிலோ 1,600 ஆகவும் சூடை மீன் ஒரு கிலோ 800 ரூபாவாகவும் சுறா மீன் ஒரு கிலோ 3,000 ரூபாவாகவும் வளையா மீன் 2,600 ரூபா, திருக்கை மீன் ஒரு கிலோ 2,600 ரூபாவாகவும் தற்போது மீனவர்கள் மற்றும் வியாபாரிகளினால் கடற்பரப்புகளை அண்டிய பகுதிகள், மீன் சந்தைகளில் வைத்து விற்பனை செய்யப்படுகின்றன.

இவ்வாறு இருந்தபோதிலும் கல்முனை மாநகர சபை பிரதேசத்திற்குபட்ட மருதமுனை, கல்முனை, பாண்டிருப்பு, சாய்ந்தமருது, நற்பிட்டிமுனை பகுதிகளில் அதிகளவான விலையேற்றங்கள் தான்தோன்றித்தனமாக சில மீனவர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனைக் கட்டுப்படுத்த நுகர்வோர் விவகார சபை நடவடிக்கை எடுக்கவேண்டுமென பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். இருந்தபோதிலும் மீன்களின் விலையேற்றங்கள் காலத்திற்கேற்ப மாறுபடும் என்பது தவிர்க்க முடியாதென சில மீனவர்கள் தெரிவித்தனர்.

மேலும், இப்பகுதியில் மாரி கால பருவ மழை இன்மையினால் அங்குள்ள ஆறு குளம் ஆகியவற்றில் அதிகளவான மீன் இனங்கள் பிடிக்கப்பட்டு, தற்போது விற்பனை செய்யப்படுகின்றன. அத்துடன், கருவாடு வகைகளின் விலையும் இப்பகுதியில் அதிகரித்து வருகிறது.

# பாண்டிருப்பில் 600 வருடங்கள் பழமை வாய்ந்த திரௌபதை அம்மன் ஆலய உற்சவம் ஆரம்பம்





(பாண்டிருப்பு நிருபர்)

மகாபாரத இதிகாசத்துடன் தொடர்புடைய கிழக்கில் வரலாற்றுப் பிரசித்திபெற்ற பாண்டிருப்பு திரௌபதை அம்மன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் இன்று (20) பூர்வாங்க கிரியைகள், ஊர்க்காவல் பண்ணல், கடல் குளித்தல், கொடியேற்றம் ஆகியவற்றுடன் ஆரம்பமாகவுள்ளது.

மகாபாரதப் போரை நினைவுகூரும் முகமாக தொடர்ந்து 18 நாட்கள் நடைபெறும் உற்சவத்தில் முக்கிய நிகழ்வுகளாக எதிர்வரும் 22ஆம் திகதி மூன்றாம் நாள் மகாபாரத இதிகாச ஏடு திறத்தல், ஏழாம் நாள் ஸ்ரீ கிருஸ்ணர் துவாரக புரியிலிருந்து அத்தினாபுரத்திற்கு செல்லும் சுவாமி எழுந்தருளப்பண்ணல், எட்டாம் நாள் அதிகாலை நாட்கால் வெட்டுதல், 12ஆம் நாள் கலியாணக்கால் வெட்டுதல், 11ஆம் நாள் கிருஸ்ணர், பாண்டவர்கள், திரௌபதை தேவாதிகள் சகிதம் வனவாசம் செல்லுதல், 17ஆம் நாள் அருச்சுனன் பாசுபதம் பெறுவதற்காக தவநிலை செல்லுதல், அரவாணை களப்பலி கொடுத்தல், 18ஆம் நாள் மாலை தீப்பள்ளயத்தின் சிகரம் என போற்றப்படும் தீமிதிப்பு வைபவம் இடம்பெறவுள்ளது.

மறுநாள் பாற்பள்ளயம், தருமருக்கு முடிசூட்டுதல், தீக்குழிக்கு பால்வார்க்கும் நிகழ்வு இடம்பெற்று அன்று இரவு 7 மணிக்கு இந்து இளைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் திரௌபதை அம்மன் ஆலயத்திலிருந்து ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்திற்கு அம்மன் முத்துச் சப்பரத்தில் எழுந்தருளி ஊர்வலம் செல்லும் நிகழ்வுடன் உற்சவம் இனிதே நிறைவுபெறவுள்ளது.

பழமையும், புதுமையும், அற்புதமும் நிறைந்த பாண்டிருப்பு திரௌபதை அம்மன் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் கொரோனா பெருந்தொற்றுக் காரணமாக கடந்த வருடம் நடைபெறவில்லை. இம்முறை நாட்டின் நாலாபாகங்களில் இருந்தும் அதிகளவிலான பக்தர்கள் பாண்டிருப்புக்கு வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதனையிட்டு இறுதி மூன்று தினங்களும் விசேட போக்குவரத்து ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஆயலத்தின் 18 நாள் உற்சவத்தின்போது தினமும் அதிகாலை 5 மணிக்கும், மாலை 5 மணிக்கும் விசேட பூசை, ஆராதனைகள் இடம்பெறவுள்ளன.

# கடலுக்குச் சென்ற மீனவர் சடலமாக மீட்பு

**வாழைச்சேனையில் சம்பவம்**



(மீராவோடை நிருபர்)

ஆழ்கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற மீனவர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை துறைமுகத்திலிருந்து கடந்த சனிக்கிழமை (17) இயந்திரப் படகில் மூன்று மீனவர்கள் மீன்பிடிக்கச் சென்றுள்ளனர். இவ்வாறு சென்ற மூன்று மீனவர்களில் ஒருவர் நேற்று முன்தினம் (18) கடலில் தவறி விழுந்து உயிரிழந்துள்ளதாக அவருடன் சென்ற இரண்டு மீனவர்களும் பொலிஸாரிடம் வாக்குமூலம் வழங்கியுள்ளனர்.

கடலுக்குச் சென்று மரணமடைந்த நபர் மாவடிச்சேனை அஹமட் ஹிராஸ் வீதியைச் சேர்ந்த 48 வயதுடைய நான்கு பிள்ளைகளின் தந்தையான இப்றா லெப்பை கலீல் என்பவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

மரணமடைந்த நபரின் உடல் பிரேத பரிசோதனைக்காக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வுகோரி பட்டங்கள் பறக்கவிட்டு போராட்டம்



(கனகராசா சரவணன்)

வடக்கு, கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும் எனும் 100 நாட்கள் செயல்முனைவின் 50 நாளையிட்டு மட்டக்களப்பு கல்லடி கடற்கரையில் நேற்று (19) பட்டங்கள் பறக்கவிட்டு கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வடக்கு, கிழக்கு மக்களுக்கான கௌரவமான உரிமையுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும் என்ற 100 நாட்கள் பேராட்டத்தின் 50ஆவது நாள் போராட்டத்தையிட்டு 8 மாவட்டங்களில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மட்டக்களப்பு, கல்லடி கடற்கரையில் ஒழுங்குசெய்யப்பட்ட இந்தப் போராட்டத்தில் நூற்றுக்கு மேற்பட்டோர் கலந்துகொண்டு பல கோரிக்கையடங்கிய வாசகங்கள்கொண்ட பட்டங்களை தயாரித்து அதனைப் பறக்கவிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# மட்டு. மாவட்டத்தில் 3000 கர்ப்பிணி, பாலூட்டும் தாய்மாருக்கு போசாக்கு உணவுப்பொதி வழங்கிவைப்பு




(காத்தான்குடி நிருபர்)

இன்றைய பொருளாதார நெருக்கடியில் கர்ப்பிணித் தாய்மார்களினதும், பாலூட்டும் தாய்மார்களினதும் போசாக்கு குறைவை கட்டுப்படுத்தும் நோக்கில் மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சேவைகள் பணிமனையின் அனுசரணையின் கீழ் சமரிட்டன் பேர்ஸ் தொண்டு நிறுவகத்தினால் 3000 கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு போசாக்கு உணவுப்பொதிகளை வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் மட்டக்களப்பு சுகாதார வைத்தியதிகாரி பிரிவிற்குட்பட்ட கூளாவடி பிரதேசத்தில் 100 தாய்மார்களுக்கு சுமார் தலா 10 ஆயிரம் ரூபா பெறுமதியான போஷாக்கு உணவுப் பொதிகள் நேற்று வழங்கப்பட்டன.

சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ.உதயகுமார் தலைமையில் கூழாவடி மாநகரசபை மண்டபத்தில் நடைபெற்ற வைபவத்தில் மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் என்.சுகுணன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.



## கண்ணீருடன் பிரியாவிடையளித்தது பிரிட்டன்:

# மறைந்தது மந்திரப் புன்னகை



### முழு இராஜ மரியாதையுடன் ஒன்றரை ஆண்டுகளாகக் காத்திருந்த இளவரசர் பிலிப்பின் உடல் அருகே ராணியின் உடல் நல்லடக்கம்











மறைந்த இரண்டாம் எலிசபெத் மகாராணியின் உடல், ராஜ மரியாதையுடன் நேற்று மாலை நல்லடக்கம் செய்யப்பபட்டது. மன்னர் மூன்றாம் சார்ள்ஸ் உட்பட அரச குடும்பத்தினர், அரச பிரமுகர்கள், வெளிநாட்டுத் தலைவர்கள், அரங்கில் கூடியிருந்தோர், பொதுமக்கள் என அனைவரின் கண்ணீர் அஞ்சலிக்கு மத்தியில் விடைபெற்றார் மகாராணி இரண்டாம் எலிசபெத். மறைந்தது மந்திரப் புன்னகை.

ராணியின் மறைவால் களையிழந்துபோயிருந்த ஐக்கிய இராச்சியம் இரண்டு நிமிடங்கள் மௌனித்தது.

இறுதிச் சடங்கில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், இந்திய குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு, இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட 500இற்கும் மேற்பட்ட உலகத் தலைவர்கள் மற்றும் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த பிரமுகர்கள் என 2000இற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டிருந்தனர். லண்டனில் வரலாறு காணாத அளவுக்குப் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

பிரித்தானிய மகாராணியாக 70 ஆண்டு காலம் பதவியிலிருந்த இரண்டாம் எலிசபெத்,



ஸ்கொட்லாந்திலுள்ள பல்மோரல் அரண்மனையில் வசித்துவந்த நிலையில், உடல்நலக்குறைவால் கடந்த 8ஆம் திகதி தனது 96ஆவது வயதில் காலமானார்.

ராணியின் மறைவையடுத்து அவரது மூத்த மகன் சார்லஸ் (வயது 73) அந்த நாட்டின் மன்னரானார். இவரது மகனான இளவரசர் வில்லியம், வேல்ஸின் புதிய இளவரசராக ஆனார்.

ராணியின் உடல் பல்மோரல் கோட்டையிலிருந்து, முதலில் எடின்பரோவுக்கு கொண்டு செல்லப்பட்டது. பின்னர் லண்டனிலுள்ள பெக்கிங்ஹாம் அரண்மனைக்குக் கொண்டு வரப்பட்டது. கடந்த 14ஆம் திகதி மாலை முதல் ராணியின் உடல், நாடாளுமன்ற வளாகத்தில் வைக்கப்பட்டது. தொடர்ந்து 4 நாட்களாக கால்கடுக்க பல கிலோமீற்றர் தொலைவில் காத்திருந்து, பல்வேறு இடர்களுக்கு மத்தியில் இலட்சக்கணக்கான பொதுமக்கள் தங்களின் ராணிக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர். பொதுமக்களுக்கு நேற்று உள்ளூர் நேரப்படி காலை 6.30 மணிவரை மாத்திரமே அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

இதனையடுத்து உலக நாடுகளின் மன்னர்கள், ராணிகள், ஜனாதிபதிகள், பிரதமர்கள் என 2,000இற்கும் மேற்பட்ட தலைவர்களும், முக்கிய பிரமுகர்கள் வெஸ்ட்மின்ஸ்டர் அபேவில் வைக்கப்பட்டிருந்த ராணியின் உடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.

இலங்கை உள்ளிட்ட பல நாடுகளின் தலைவர்கள் இறுதிச் சடங்கில் பங்கேற்றாலும் கூட, ரஷ்யா, பெலாரஸ், மியன்மார், ஆப்கானிஸ்தான், சிரியா, வெனிசுலா ஆகிய நாடுகளுக்கு அழைப்பு கொடுக்கவில்லை. அதனால் அந்த நாட்டின் சார்பில் ராணிக்கு இறுதி அஞ்சலி செலுத்தப்படவில்லை.

தொடர்ந்து இலங்கை நேரப்படி மாலை 3.30 மணியளவில் இறுதிச்சடங்கு தொடர்பான சடங்குகள் ஆரம்பமாகின. பிரித்தானிய முழுவதும் ராணியின் இறுதிச் சடங்கிற்காக கடைகள் மற்றும் வணிக வளாகங்கள் மூடப்பட்டன. ட்ரோன்கள் பறக்க தடை விதிப்பட்டிருந்தன. ஹீத்ரோ விமான நிலையம் விமானங்களை இயக்கவில்லை.

கடந்த 57 ஆண்டுகளுக்கு பின்னர் லண்டனில் அரசு மரியாதையுடன் நடைபெற்றும் இறுதிச்சடங்கு என்பதால் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இந்நிலையில் மன்னர் சார்ள்ஸின் மனைவி கெமீலா வெளியிட்ட விடியோ செய்தியில்,

''ஆண்கள் ஆதிக்கம் செலுத்தும் உலக அரங்கில் ராணி எலிசபெத் தனிச் சிறப்புடன் செயற்பட்டார். அவரது புன்னகையை எப்போதும் நினைவில் கொண்டிருப்பேன்'' எனத் தெரிவித்தார்.

நேற்று காலை தலைவர்கள், பொதுமக்கள் அஞ்சலிக்கு

பின்னர், மகாராணியின் உடல் அடங்கிய பேழையின் மீது ராணியின் கோஹினூர் வைரம் பதிக்கப்பட்ட கிரீடம், செங்கோல் வைக்கப்பட்டு இராணுவ வீரர்கள் மரியாதையுடன் ராணியின் உடல் இராணுவ வாகனத்தில் ஏற்றப்பட்டு வெஸ்ட்மின்ஸ்டர் ஹோலிலிருந்து வெஸ்ட்மின்ஸ்டர் அபேக்கு ஊர்வலமாக கொண்டு செல்லப்பட்டது.

அப்போது வீதியின் இருமருங்கிலும் கூடியிருந்த மக்கள் கண்ணீர் மல்க ராணிக்கு பிரியாவிடையளித்தனர்.

வின்ட்சர் கோட்டையை இராணுவ வாகனம் அடைந்ததும், அங்குள்ள புனித ஜோர்ஜ் தேவாலய பேராயரிடம் ராணியின் உடல் ஒப்படைக்கப்பட்டு தேவாலயத்துள் எடுத்துச் செல்லப்பட்டபோது மன்னர் சார்ள்ஸ் - டயனா தம்பதியினரின் மகன் வில்லியமின் மகன் மற்றும் மகள் (ராணியின் கொள்ளுப் பேரப்பிள்ளைகள்) இளவரசர் ஜோர்ஜ் (George வயது 9) மற்றும் இளவரசி சார்லெட் (Charlotte) இடம்பெற்ற அரச குடும்ப அணிவகுப்பில் கலந்துகொண்டு தமது பாட்டிக்கு இறுதி மரியாதை செலுத்தினர்.

பின்னர் தேவாலயத்தில் பிரார்த்தனைகள் இடம்பெற்றதுடன் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.



பின்னர் முப்படைகளின் இசை மரியாதை செலுத்தப்பட்டது. பிரித்தானிய திருச்சபையின் மூத்த உறுப்பினரான கேன்டர்பரி பேராயர் ஜஸ்டின் வெல்பி, ராணியின் இறுதிச் சடங்கிற்கு தலைமை வகித்தார்.

இறுதிச் சடங்கின் பின்னர் ராணி எலிசபெத்தின் கிரீடம், சார்லஸின் மனைவியும் புதிய ராணியுமான கெமீலாவிடம் ஒப்படைக்கப்பட்டது.

தனது இறுதிச்சடங்கின் போதே கணவரையும் தனக்கு அருகே அடக்கம் செய்ய வேண்டும் என்பது ராணியின் கடைசி விருப்பம். அதற்காகவே, கடந்த ஒன்றரை ஆண்டுகளாக பிலிப்பின் உடல் பாதுகாக்கப்பட்டு வைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் நேற்று இலங்கை நேரப்படி 5.30 மணியளவில் இராஜ மரியாதையுடன் மகாராணி இரண்டாம் எலிசபெத்தின் உடல் ரோயல் வோல்ட் என அழைக்கப்படும் தரைக்கு அடியில் அமைக்கப்பட்டுள்ள அடக்க அறையில் ராணியின் கணவர் பிலிப்பின் உடலுக்கு அருகே நல்லடக்கம் செய்யப்பட்டது.

**2 நிமிடம் மௌன அஞ்சலி; விமானங்கள் பறக்க தடை**

ராணியின் உடல் அடக்கம் செய்யப்பட்ட பின்னர், ஐக்கிய இராச்சியம் முழுவதும் 2 நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. அப்போது, விமான சத்தத்தால் இடையூறு ஏற்படுவதை தவிர்க்க, அந்த நேரத்தில் விமானங்கள் பறக்க தடை விதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஏற்கனவே, இராணியின் இறுதிச் சடங்கிற்கு கூட்டம் அலை மோதும் என்பதால், பெக்கிம்ஹாம் அரண்மனை, நாடாளுமன்ற கட்டிடம், வெஸ்ட்மினிஸ்டர் அபேவை சுற்றி பலத்த பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டன. மத்திய லண்டன் நகரில் மக்கள் வருகையை கட்டுப்படுத்த 36 கிலோ மீற்றர் தொலைவுக்கு பாதுகாப்பு தடுப்புகள் (பேரிகார்ட்ஸ்) அமைக்கப்பட்டிருந்தன.

பாதுகாப்பு பணியில் 10 ஆயிரம் பொலிஸாரும், 8 ஆயிரம் இராணுவ வீரர்களும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

1965ஆம் ஆண்டு முன்னாள் பிரதமர் வின்ஸ்டர் சர்ச்சில் உடல், அரசு மரியாதைப்படி நல்லடக்கம் செய்யப்பட்டது. இதையடுத்து தற்போதுதான் முதன்முறையாக அரசு மரியாதைப்படி நல்லடக்கம் செய்யும் நிகழ்வு நடைபெற்றுள்ளது. கண்ணீர் அஞ்சலிக்கு மத்தியில் விடைபெற்றார் மகாராணி இரண்டாம் எலிசபெத்.

## மகாராணியாருக்கு ஜனாதிபதி அஞ்சலி



பிரித்தானியாவின் இரண்டாம் எலிசபெத் மகாராணிக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, முதற்பெண்மணி மைத்ரி விக்கிரமசிங்க மற்றும் இலங்கை உயர்ஸ்தானிகர் சரோஜா சிறிசேன ஆகியோர் நேற்று முன்தினம் (18) வெஸ்ட்மின்ஸ்டரில் அஞ்சலி செலுத்தினர்.

திருமண தேடல் விளம்பரங்களை
இலவசமாக பிரசுரித்துக்கொள்ள
அரிய வாய்ப்பு!

"உங்களுடைய
அன்பான மகன் / மகளின்
திருமணத்துக்கு பொருத்தமான
துணையை தேடுகிறீர்களா?
வட்ஸ்அப் ஊடாக எமக்கு
விபரங்களை அனுப்பி வையுங்கள்!"



தமிழன் ஞாயிறு வார இதழில் வெளியாகும் விளம்பர பக்கத்தில் உங்களுடைய மகன் / மகளுடைய விபரங்களையும் எப்படியான துணையை தேடுகிறீர்கள் என்ற விடயத்தையும் தெளிவாக குறிப்பிட்டு (30 சொற்களுக்குக் குறைவாக) உங்களுடைய விலாசத்தை குறிப்பிட்டு கீழே உள்ள எமது வட்ஸ்அப் இலக்கத்துக்கு அனுப்பிவையுங்கள். இவற்றுக்கு எதுவித கட்டணங்களும் அறவிடப்படமாட்டாது.

மேலதிக தகவல்களுக்கு
தொடர்புகொள்க : சுசி - 0115 886187

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைபேசி இல : 0115 200 900,
தொலைநகல் : 0112 673 442
வட்ஸ்அப் : 076 139 3805

thamilaneditor@gmail.com

விவாஹா

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7